Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

FRIDAY, JUNE 6 2025

வெள்ளிக்கிழமை 06, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 255 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

சுற்றாடலை மீட்டெடுத்து வருங்கால சந்ததியினருக்கு வழங்குவதே

# “நமது பொறுப்பு”

**உங்கள் நாடு அழகாக இருக்கிறது என்று கூறுகிறார்கள்**

**பிளாஸ்டிக் பாவனையை ஒழிப்போம்” என்பதுடன், “முளைப்பதற்கு இடமளிப்போம்”**

கொங்கிறீட் பிளாஸ்டிக்கினால் அழிந்துள்ள சூழலை மீட்டெடுக்கும் பொறுப்பு அனைவருக்கும் இருப்பதாகவும், தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதற்கு சுற்றாடலைப் பயன்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

பொதுவான தேசிய உணர்வுடன் பூமியுடன் பிணைப்பைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு நமது தலைமுறைக்கு உள்ளது என்றும், இந்தப் பொறுப்பை புறக்கணிக்கக் கூடாது என்றும், எந்தவித பாகுபாடும் இல்லாமல் அனைவரும் இதில் இணைய வேண்டும் என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கேகாலை நிதஹஸ் மாவத்தையில் வியாழக்கிழமை (05) நடைபெற்ற உலக சுற்றாடல் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# பேபி அம்மாவுக்கு 7 ஆண்டுகள் சிறை

பிறந்து இரண்டு நாளேயான சிசுவை, 75,000 ரூபாய்க்கு விற்க முயன்றதற்காக, மூன்று குழந்தைகளின் தாயான 46 வயதுடைய தாய்க்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க, ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை வியாழக்கிழமை (05) விதித்தார்.

குழந்தைகள் மற்றும் மகளிர் பணியக அதிகாரி ஒருவருக்கு அந்த தாய், தனது குழந்தையை விற்க முயன்றுள்ளார்.

இலங்கை தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டி, சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீண்ட விசாரணைக்குப் பிறகு இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

சிறைத் தண்டனைக்கு மேலதிகமாக, ரூ.20,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அபராதம் செலுத்தப்படாவிட்டால், மேலும் ஆறு மாதங்கள் சிறைத்தண்டனையும் நீதிபதி விதித்தார்.



# சதொச மனித புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் சதொச மனித புதைகுழி தொடர்பில் சில தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக மன்றின் ஆஜரான சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் தெரிவித்தார்.

மன்னார் சதோச மனித புதைகுழி வழக்கு வியாழக்கிழமை(5) அன்று மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் சதொச மனித புதைகுழி வழக்கு இன்றைய தினம் வியாழக்கிழமை(5) மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2



# விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

**மற்றுமொரு பெண்ணும், முன்னாள் அமைச்சரின் சமையல்காரரும் கைது**

தங்கமுலாம் துப்பாக்கி வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (SLFP) அனுராதபுரம் மாவட்ட அமைப்பாளருமான துமிந்த திசாநாயக்கவின் விளக்கமறியல் ஜூன் 19ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# “பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் 400”

நாட்டில் 1,400 வரையிலான ரயில் கடவைகள் காணப்படுகின்றன. அவற்றில் 400இற்கும் அதிகமானவை பாதுகாப்பற்ற கடவைகளாக உள்ளதாகத் தெரிவித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக,நடுத்தர குடும்பம் ஒன்று, தமது மாத வருமானத்தில் 25 சதவீதத்தை பொது போக்குவரத்து சேவைக்காக செலவழிக்க வேண்டிய நிலையுள்ளதாகவும் கூறினார்

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) இடம்பெற்ற தேசிய போக்குவரத்து ஆணைக்குழு



(திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்த

அவர் மேலும் பேசுகையில், அரச, தனியார் பேருந்து

தொடர்ச்சி P2

# களுத்துறை மாவட்டத்தில் “தமிழ்மொழி பாடசாலைகளில் குறைப்பாடுகளுக்கு தீர்வு”

களுத்துறை மாவட்டத்தில் தமிழ்மொழி பாடசாலைகளில் நிலவும் பௌதீக மற்றும் மானிட வசதிகளில் நிலவும் குறைபாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பிரதி கல்வி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (04) அன்று வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் பெருந்தோட்ட பகுதிகளில் வாழ்பவர்களின் வாழ்க்கைத் தரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# குருந்தூர் மலையில் கைதான விவசாயிகளை விடுவிக்க உத்தரவு

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருந்தூர் மலை பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக வழக்கு இடம்பெற்று வந்தது

இந்நிலையில், குறித்த வழக்கு வியாழக்கிழமை (05) அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்களான விவசாயிகள் இருவரையும் வழக்கில் இருந்து விடுவிக்க முல்லைத்தீவு



நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த. பிரதீபன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கு தொடுனர்கள் சார்பில் முல்லைத்தீவு பொலிஸார், தொல்லியல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணி ஒருவரும் ஆஜராகி இருந்தனர்

இதேவேளையில்,

தொடர்ச்சி P2

# மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிப்பு

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கத்தால் தனிநபர் பிரேரணையாக, மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் வியாழக்கிழமை (05) அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாம் காரியப்பர் வழிமொழிந்தார்.



தொடர்ச்சி P2

# ரயிலில் மோதுண்டு தம்பதி உயிரிழப்பு

தெஹிவளை ரயில் நிலையத்திற்கு அருகில் புதன்கிழமை மாலை (04) ரயிலில் மோதுண்டு இருவர் உயிரிழந்துள்ளனர் என தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, பதுலுபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த சம்சுதீன் நிசர்தீன் (வயது 59) மற்றும் ஜினத்தம்மா நிசர்தீன் (வயது 58) ஆகியோரே மரணமடைந்துள்ளனர்.

குறித்த தம்பதியினர் ரயில் தண்டவாளத்தை கடக்க முயன்றபோது, மருதானையில்



இருந்து அளுத்கம நோக்கிச் சென்ற ரயிலில் மோதி இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# “விபத்துக்களைத் தடுக்க 85 திட்டங்கள் தயார்”

நாட்டில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு விபத்துக்களைத் தடுப்பதற்கு 85 திட்டங்கள் அடங்கிய செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, கப்பற்றுறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்நிலையில், இன்னும் இரு மாத காலப்பகுதிக்குள் 40 அரச மற்றும் தனியார் பேருந்துகளில் AI தொழில்நுட்பத்துடன் கண்காணிப்பு கருவிகள் பொருத்தப்படும் என்றார்.

தொடர்ச்சி P2



# “இஸ்ரேலியர்களின் இரண்டு நிலையங்கள் பதியவில்லை”

இலங்கையில் இஸ்ரேலியர்களின் சமய மற்றும் கலாசார நிலையங்கள் நான்கு உள்ளன. அவற்றில் இரண்டு நிறுவனங்களே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பதிவு செய்யப்படாமல் இருக்கும் ஏனைய சட்டவிரோத இரு நிறுவனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமென புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) அன்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற

தொடர்ச்சி P2

அமெரிக்காவிற்குள் நுழைய

# 12 நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளுக்கு தடை



12 நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் அமெரிக்காவிற்குள் நுழைவதைத் தடை செய்யும் ஒரு பிரகடனத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதன்கிழமை (04) கையெழுத்திட்டார்.

தேசிய பாதுகாப்பை முன்னிட்டு இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அதன்படி, ஆப்கானிஸ்தான், மியான்மர், சாட், காங்கோ,

தொடர்ச்சி P2

# "நமது பொறுப்பு"

இந்த ஆண்டுக்கான உலக சுற்றாடல் தினத்தின் தொனிப்பொருள் "பிளாஸ்டிக் பாவனையை ஒழிப்போம்" என்பதுடன், "முளைப்பதற்கு இடமளிப்போம்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

சுற்றாடல் மறுமலர்ச்சிக்குத் தேவையான சந்தர்ப்பத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதுடன், உலக சுற்றாடல் தினத்தை ஒரு சம்பிரதாயமாகக் கொண்டாடுவதற்குப் பதிலாக, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பிக்க எதிர்பார்க்கிறது.

அங்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தொடர்ந்து உரையாற்றுகையில்,

நமது தாய்நாடு மற்றும் நமது சுற்றாடல் கட்டமைப்பு பற்றிய பிணைப்பு, பொறுப்பும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த நிகழ்வு வெறும் விழா மாத்திரம் அல்ல. சுற்றாடல் கட்டமைப்பு மீதான நமது பிணைப்பு, உணர்வுகள் மற்றும் பொறுப்புகளின் பிரகடனம் இது என்று நான் நம்புகிறேன். நாம் ஒரு வெளிநாட்டவரைச் சந்தித்தால், அவர்கள் அனைவரும் உங்கள் நாடு அழகாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். நமது நாட்டின் சுற்றாடல் கட்டமைப்பு குறித்து நமக்கு மிகவும் பெறுமதிமிக்க வரலாறு உள்ளது. இந்த சுற்றுச்சூழல் அமைப்பு இன்று நமது நாட்டை அழகாக மாற்றியுள்ளது.

ஆனால் நாம் காணும் இந்த அழகுக்குப் பின்னால், மிக ஆழமான ஒரு துக்கம் இருக்கிறது. நாம் பார்க்கும் இந்த அழகு உண்மையில் சுற்றுச்சூழல் அமைப்பில் இருக்கிறதா? அதைவிட ஆழமான சோகத்தை நாம் சந்தித்திருக்கிறோம். நாங்கள் குழந்தையாக இருந்தபோது, எங்கள் நாட்டை நிலச்சரிவு இல்லாத நாடாக அடையாளம் கண்டோம். ஆனால், எங்கள் வாழ்நாளிலேயே, நிலச்சரிவுகளின் துயரத்தை நாங்கள் அனுபவிக்கிறோம்.

நாங்கள் இளமையாக இருந்தபோது, வெள்ளம் மற்றும் பாரிய வறட்சி இல்லாத ஒரு நாடாக எங்கள் நாட்டை கண்டோம். அந்த உரிமையுடன் பிறந்த நாம், எமது வாழ்நாளில் பாரிய வெள்ளம் மற்றும் பாரிய வறட்சியின் பேரழிவை அனுபவிக்கிறோம். மேலும், மனித-யானை மோதல் ஒரு பாரிய சோகமாக மாறிவிட்டது. மிகச் சிறந்த உயிரியல் பன்முகத்தன்மை கொண்டிருந்த நமது நாட்டின் சுற்றுச்சூழல் அமைப்புக்கும், அதில் வாழும் உயிரினங்களுக்கும் இடையே ஒரு பாரிய மோதல் உருவாகியுள்ளது.

எனவே, இன்று வாழும் நமக்கு, நாம் கைவிட முடியாத ஒரு பொறுப்பும் கடமையும் உள்ளன. இந்த நாட்டில் சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுக்க வேண்டும்.

இந்த சோகம் இப்படியே தொடர்ந்தால், நமது வருங்கால சந்ததியினருக்கு ஒரு பாரிய துயரத்தையே விட்டுச் செல்வோம். எனவே, இன்று வாழும் பிரஜைகளாக, இந்த சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுத்து, எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாப்பது நமது கைவிட முடியாத பொறுப்பாகும்.

முதலாவதாக, இந்த அழிவுகளுக்குப் பின்னால் அரசியல் சக்தி இருக்கிறது. நம் நாட்டில் உள்ள ஏராளமான மணல் அகழ்வு பிரதேசங்கள் அரசியல்வாதிகளுக்குச் சொந்தமானவை, அல்லது ஒரு அரசியல்வாதிக்கு நெருக்கமான ஒருவருக்குச் சொந்தமானவை. இந்த நிலைமையை என்னை விட உங்களுக்கு நன்றாகத் தெரியும். நமது காடுகள் அழிக்கப்பட்டதற்குப் பின்னால் அரசியல்வாதிகள் உள்ளனர். இந்தக் காடுகள் அழிக்கப்படுவது, அரசியல் அதிகாரத்தால் பாதுகாக்கப்பட்டது.

உயிரைக் கொல்வதற்கு பங்கேற்க வேண்டாம். உயிரைக் கொடுக்க பங்கெடுங்கள். அதற்குத் தேவையான அரசியல் பாதுகாப்பை நாங்கள் வழங்குவோம். அரசியல் அதிகாரம் மேம்படுத்தப்பட்டிருந்தாலும், பழைய அதிகாரத்துவ பொறிமுறையின் சில பகுதிகள் பழைய பழக்கவழக்கங்களிலிருந்து விடுபடத் தவறிவிட்டன. போலியான கடவுச்சீட்டுகளை தயாரித்த அதிகாரிகளுக்கு எதிராக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களமும் பொருட்களை வெளியேவிட்ட அதிகாரிகளுக்கு எதிராக சுங்கத் துறையும் பல்வேறு விதிமீறல்களைச் செய்த அதிகாரிகளுக்கு எதிராக சுரங்கப் பணியகமும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

அதனால்தான் பழைய பழக்கங்களை விட்டுவிட்டு புதிய பழக்கங்களைத் தொடங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கூறுகிறோம். நான் மீண்டும் கூறுகிறேன், மாறுங்கள், இல்லையெனில் நாம் மாற்றுவோம்.

மத்திய மலைநாட்டில் உள்ள ஏராளமான நீர்த்தேக்கங்கள் சேற்றால் நிரம்பியுள்ளன. சுற்றுச்சூழல் திட்டங்களை உருவாக்கும்போது சுற்றுச்சூழலைப் பற்றி சிந்தித்தோமா என்பதை நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இன்று, நமது சுற்றுச்சூழல் அமைப்பில் கொக்குகளையோ அல்லது வண்ணத்துப் பூச்சிகளையோ நாம் காணவில்லை. மனிதனால் ஏற்படும் பேரழிவின் விளைவுகளை நாம் காணலாம். இன்று, வண்ணத்துப் பூச்சிகள் காணப்படாத ஒரு நாட்டில் சிறு குழந்தைகள் வளர்கிறார்கள். எனவே, வண்ணத்துப் பூச்சிகள் திரும்பி வரும் ஒரு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவது நமது பொறுப்பு என்றார்.

## சதொச மனித புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு

இதன்போது, ஏற்கெனவே அழைக்கப்பட்ட சட்டத்தரணிகள் பிரசன்னமாகி இருந்த நிலையில், மன்னார் நீதிமன்ற நீதவான் மற்றும் அழைக்கப்பட்ட நிறுவனத்தினரும் குறித்த சதோச மனித புதைகுழி பகுதியை வியாழக்கிழமை (5) காலை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

மேலும், சில தீர்மானங்களுக்கு முன் வந்தார்கள். குறித்த புதைகுழி பிரதேசத்தைச் சுத்தப்படுத்துவதாகவும், நிரம்பியுள்ள நீரை அகற்றுவதற்கு நகர சபை இணங்கிக்கொண்டுள்ளதன் அடிப்படையில், குறித்த நீரை அகற்றுவது என்றும்,குறித்த புதைகுழியைப் பகுதி அளவில் மூடுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

ஏற்கெனவே எடுக்கப்பட்ட மண் சதொச நிறுவனத்திடம் காணப்படுகின்றதா?, அது எங்கே இருக்கிறது போன்ற□விடையங்களை□பொலிஸார் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறும், தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், இந்த வழங்கு மீண்டும் எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை மேலதிக நடவடிக்கைக்காக அழைக்கப்பட உள்ளது என தெரிவித்தார்.

இதன் போது காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் கருத்துக்களை தெரிவித்தார்.

## விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

'ஹெவ்லொக் சிட்டி' அடுக்குமாடிக் குடியிருப்பில் பெண்ணொருவர், தனது பயணப்பொதியில் T56 துப்பாக்கியுடன் வந்திந்தபோது, மே மாதம் 20 கைது செய்யப்பட்டார். அதன்பின்னர் மற்றுமொரு பெண்ணும், முன்னாள் அமைச்சரின் சமையல்காரரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே, முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## 12 நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளுக்கு தடை

எக்குவடோரியல் கினியா, எரிட்ரியா, ஹைட்டி, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான் மற்றும் ஏமன். புருண்டி, கியூபா, லாவோஸ், சியரா லியோன், டோகோ, துர்க்மெனிஸ்தான் மற்றும் வெனிசுலா ஆகிய ஏழு நாடுகளைச் சேர்ந்த மக்களின் நுழைவு ஓரளவு கட்டுப்படுத்தப்படும். பயணக் கட்டுப்பாடுகள் முதலில் CBS செய்திகளால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த தடை எதிர்வரும் 9ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

## குருந்தூர் மலையில் கைதான விவசாயிகளை விடுவிக்க உத்தரவு

சந்தேக நபர்கள் சார்பாக முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த 12க்கு மேற்பட்ட சட்டத்தரணிகள் ஆஜராகி இருந்தனர்

நீதிபதி தனது கட்டளையில் விசேடமாக, குறித்த சந்தேக நபர்கள் மீது வழக்கைத் தொடர்ந்து நடத்தக்கூடிய அடிப்படை முகாந்திரங்கள் இல்லை எனவும், குறித்த பிரதேசம் இன்னமும் தொல்பொருள் திணைக்களத்திற்குரிய பிரதேசம் என வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என்பதை வழக்குத் தொடுனர் தரப்பே ஏற்றுக்கொண்டதை விசேடமாகக் குறிப்பிட்டு இருவரையும் விடுவித்த தோடு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

## "விபத்துக்களைத் தடுக்க 85 திட்டங்கள் தயார்"

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) அன்று இடம்பெற்ற தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்த) சட்ட மூலத்தை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை இந்த திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக விரிவுப்படுத்தப்படவுள்ளது து. மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சேவைக்கான அனுமதிப்பத்திர சேவை புதுப்பிக்கப்படும்.

இதேவேளை, நாட்டில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு விபத்துக்களைத் தடுப்பதற்கு 85 திட்டங்கள் அடங்கிய செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்க ளுக்கிடையிலும், மாகாணங்களுக்குமிடையிலும் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் தரம் குறித்து தீவிர கவனம் செலுத்தப்படும். எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள்

> **வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வீதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும் முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் நிர்மாண பணிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படும்**

40 அரச மற்றும் தனியார் பேருந்துகளில் ஏ.ஐ தொழில்நுட்ப வசதியிலான கருவிகள் பொருத்தப்பட்டு, கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

வெளிநாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள வீதி நிர்மாணிப்புக்கள் மீள ஆரம்பிக்கப்படும். 12 ஆண்டுகால உத்தரவாதத்துடன், வீதிகள் புனரமைக்கப்படும். மத்திய அதிவேக நெடுஞ்சாலைகள் புனரமைக்கப்படும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வீதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும் முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் நிர்மாண பணிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படும் என்றார்.

## "பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் 400"

சேவை, பயணிகள் ஒட்டோ சேவை மற்றும் பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை ஆகிய சேவைகளைக் கண்காணிக்கும் வகையில் இந்த சட்டமூலத்தை அரசாங்கம் முன்வைத்துள்ளமை வரவேற்கத்தக்கது.

பேருந்து மற்றும் ரயில்களில் பயணிகள் பாதுகாப்பற்ற வகையில் தான் பயணிக்கிறார்கள். இதற்கு குறுகிய கால அடிப்படையில் தீர்வு காண முடியாது என்பதை அறிவோம். நீண்டகால அடிப்படையில் தீர்வு காண்பதற்கான திட்டங்களை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும். சிறந்த திட்டங்களுக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

சொந்த வாகனம் வைத்திருப்பவர்கள் தமது வருமானத்தில் பெரும்பங்கினை எரிபொருள் மற்றும் வாகன பராமரிப்புக்காக செலவழிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

பொது போக்குவரத்து சேவையில் ரயில் சேவை பிரதான ஒன்றாகக் காணப்படுகிறது. ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு ள்ளாகிறார்கள்.

ரயில்கள் தாமதமடைதல், சேவைகள் இரத்தாகுதல் வழமையாகி விட்டது. இதனால் பொது பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கிறார்கள் என்றார்.

## "தமிழ்மொழி பாடசாலைகளில் குறைப்பாடுகளுக்கு தீர்வு"

எமது பகுதியில் பெருமளவிலான தமிழ் பாடசாலைகள் உள்ளன. தோட்டப் பகுதிகளை அண்மித்த வகையில் சுமார் 45 ஆயிரம் பேர் வரையில் வாழ்கிறார்கள்.தோட்டப் பகுதிகளில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக புளத்சிங்கள, அகலவத்தை மற்றும் பாலிந்தநுவர ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளில் பல பிரச்சினைகள் உள்ளன. பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட வேண்டுமாயின் அவர்களின் பிள்ளைகளின் கல்வித்தரம் மேம்பட வேண்டும். இதற்கு ஏதேனும் விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட எம்.பி. தனுஷ்க ரங்கனாத் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

களுத்துறை மாவட்டத்தில் 62 தமிழ் பாடசாலைகள் உள்ளன. களுத்துறை மாவட்டத்தில் கலைத்துறை பாடங்கள் கற்பிக்க கூடிய 08 பாடசாலைகளும், வர்த்தகத்துறையில் கற்பிக்க கூடிய 17 பாடசாலைகளும் உள்ளன. பெரும்பாலான பாடசாலைகளில் கலை மற்றும் வர்த்தக பாடப்பிரிவுகள் ஒருமித்த வகையில் உள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் தமிழ்மொழி பாடசாலைகளில் நிலவும் பௌதீக மற்றும் மனிதவள வசதிகளில் நிலவும் குறைபாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன

## "இஸ்ரேலியர்களின் இரண்டு நிலையங்கள் பதியவில்லை"

உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

முஜிபுர் ரஹ்மான் எம்.பி. இஸ்ரேலியர்களின் சமய மற்றும் கலாசார நிலையங்கள் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளனவா? அவை தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை? அவற்றுக்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என கேள்வி எழுப்பினார்.

அதற்கு அமைச்சர் சுனில் செனவி பதிலளிக்கையிலேயே

இலங்கையில் இஸ்ரேலியர்களின் சமய மற்றும் கலாசார நிலையங்கள் பொத்துவில், எல்ல, வெலிகம மற்றும் திம்பிரிகஸ்யாய ஆகிய பிரதேசங்களில் தாபிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தாபிக்கப்பட்டுள்ள சமய மற்றும் கலாசார நிலையங்களில் பொத்துவில் மற்றும் திம்பிரிகஸ்யாய ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருக்கும் நிலையங்கள் பதிவு செய்யப்படாமல் சட்டவிரோதமாக இருக்கின்றன. மற்ற இரண்டு நிலையங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பொத்துவில் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் நிலையத்தைப் பதிவு செய்யாமல் இருப்பதற்கான காரணம் தெரியாது.

கிராம சேவகர் அந்த பகுதியில் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில், அதுதொடர்பில் தகவல் பெற்றுக்கொள்ள அங்கு யாரும் இருக்கவில்லை என்பதால் பொது மக்களிடமிருந்து தகவல் பெற்றுக்கொண்டிருக்கிறார். அதன்போது அவர்கள், இது தனியார் காணி என்றும். அதனால் அதனைப் பதிவு செய்யாமல் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். அதேநேரம், இஸ்ரேலியர்கள் சுற்றுலாப் பயணிகளாக இந்த பிரதேசத்துக்கு வந்தால். இந்த மத நிலையத்தில் மத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் தற்போது அவர்கள் இலங்கையிலிருந்து சென்றுள்ளதாகவும் பொது மக்கள் தெரிவித்ததாக கிராம சேவகரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், திம்பிரிகஸ்யாய பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் கட்டிடம் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் மத நிலையமாகவோ நிறுவனமாகவோ பதிவு செய்யப்படவில்லை. பூஜை வழிபாட்டுக்காக என தெரிவித்து இஸ்ரேலியர்கள் 4பேர் அங்கு தங்கி இருந்ததுடன், வெளிப் பிரதேசங்களில் இஸ்ரேலியர்கள் மத வழிபாட்டில் ஈடுபடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ள வெலிகம மற்றும் எல்ல நிறுவனங்கள், பதிவாளர் காரியாலயத்திலே 2024ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 22ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளன என்றார்.

## மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிப்பு

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (05) அன்று சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி கடந்த மே 22ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அந்த வர்த்தமானி அறிவித்தலில், 2017ஆம் ஆண்டில் செப்டெம்பர் 21ஆம் திகதி வலுவிலிருந்த 1988 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தினால் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எவ்வாறிருப்பினும், 2017 செப்டெம்பர் 22ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்றதும் இந்த சட்டம் நடைமுறைக்கு வருகின்ற திகதி வரைக்குமான காலப்பகுதியின்போது செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்குப் பங்கமின்றி, அத்தகைய செயல் 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, இச்சட்டம் வலுவுக்கு வருகின்ற திகதியிலிருந்து பயனுறுவதாக நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




# மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி ஆர்ப்பாட்டம்

■ புகஜிந்தன்

செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிக்கு நீதி வேண்டி வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் செம்மணி சந்தியில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று வியாழக்கிழமை (05) முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளைத் தாங்கி கோஷமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் மு.கோமகன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.











# திருமலையில் ஆர்ப்பாட்டம்

■ ஏ.எச்.ஹஸ்பர், எஸ்.கீதபொன்கலன்

திருகோணமலை - நிலாவெளி பிரதான வீதியை மறித்து திருக்கடலூர் பிரதேச மீனவர்கள், கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை வியாழக்கிழமை (05) அன்று முன்னெடுத்தனர்.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் வாழைச்சேனை கடற்பரப்பில் தங்களது படகை சேதத்துக்கு உள்ளாக்கி மீனவர்களை தாக்கியவர்களை கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறி குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் போது பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் ஒரு சில மணி நேரம் அப்பகுதி போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

பல நூற்றுக் கணக்கான மீனவக் குடும்பங்கள் கலந்து கொண்டு இந்த வீதி மறியல் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.









## யாழ். போதனா வைத்தியசாலை

# “தன்னார்வ ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்”

யாழ். போதனா வைத்தியசாலையில் தன்னார்வ அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாகவும், இதன்படி, அவர்களின் பணிப்பிரிவின் கீழ், எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புகள் இடம்பெறுமாக இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஊடகம் மற்றும் சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(05) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதி அமைச்சர் இதனை கூறினார்.



“யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரான வைத்தியர் சத்தியமூர்த்தி தங்கமுத்து கடந்த மூன்று வருடங்களில் அரசாங்கத் துறையில் 170 பேரை தொழிலுக்கு அமர்த்தியுள்ளார் என்பதையும், இந்த ஊழியர்களுக்கு மாதாந்தம் 10000 ரூபாவிற்குக் குறைவான தொகை அவர்களின் 36 மாத தொழிற் காலத்தின் போது ஆகக்கூடுதலாக 05 மாத காலத்திற்கு மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்,இவ்வாறான தொழில் நடைமுறைகள் இலங்கையின் தொழில் சட்டங்களை மீறியுள்ளன என்பதையும், அமைச்சர் அறிவாரா? ” என் அர்ச்சுனா எம்.பி கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி கூறுகையில்,

“முகாமைத்துவ சேவை பணிப்பாளரின் 2025 ஜனவரி 22ஆம் திகதிக்குரிய கடிதத்திற்கமைய சுகாதார அமைச்சின் கீழான சகல வைத்தியசாலைகளிலும் நிரந்தர நியமனமற்ற அனுமதிக்கப்பட்ட பணியாளர்களை விடவும் மேலதிகமாக பணியில் ஈடுபடுபவர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது, யாழ். போதனா வைத்தியசாலையில் தன்னார்வ அடிப்படையில் பணியாற்றுபவர்கள் இருப்பது தொடர்பான தகவல்கள் கிடைத்தன.

இது தொடர்பில் ஆராய்ந்த போது அங்கே மூன்று மாதங்களுக்கு பணியாற்றுவதற்காக அந்த வைத்தியாசலையின் பிரதி பணிப்பாளராக 2021ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த காலப்பகுதியில் வைத்தியர் சத்தியமூர்த்தி வெளிநாட்டில் பயிற்சியொன்றில் ஈடுபட்டிருந்தார். இந்த பணியானது தன்னார்வ அடிப்படையிலான பணி என்பதனால் இதில் தொழில் சட்டங்கள் மீறப்படவில்லை. இவர்கள் அரச பணியாளர்களான நியமிக்கப்படவில்லை. இந்நிலையில் தன்னார்வ அடிப்படையில் பயிற்சி பெறுபவர்களாகவே இருந்துள்ளனர். இவர்கள் கொழும்புக்கு வந்து சுகாதார அமைச்சரை சந்தித்தனர். அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

அவர்களை நிரந்தர பணியில் நியமிப்பதாக கடந்த காலங்களில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் அவர்களின் பணிப் பிரிவின் கீழ் நியமனங்கள் இடம்பெறவில்லை. ஆனால் அவ்வாறு நியமனங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதாக எழுத்துமூலம் அவர்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளோம் ” என்றார்.

# 27,500 மில்லி லிட்டர் கசிப்புடன் ஒருவர் கைது

■ சுமனசிறி குணதிலக

மொனராகலை பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மெதகம, பொதுகொலபிட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, 27,500 மில்லி லிட்டர் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பொதுகொலபிட்டியவைச் சேர்ந்த 42 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தனது வீட்டிலிருந்து கசிப்புவை வெளியே எடுத்துச் செல்லும் போது கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.



# கிழக்கு ஆளுநர் - செவரின் சந்திப்பு

■ ஏ.எச்.ஹஸ்பர்

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுக்குழுவின் தலைவர் செவரின் சப்பாஸ் (Severine Chappaz ) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் புதன்கிழமை (04)நடைபெற்றது.

இதில், கிழக்கு மாகாணத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதுடன், ஆளுநர் அதைப் பாராட்டினார். மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும், செஞ்சிலுவைச் சங்கத்தின் எதிர்கால செயற்பாடு குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.





# கஞ்சாவுடன் பெண் கைது

அனுராதபுரம், ஹொரவ்பொத்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிமுகபொத்தானபிரதேசத்தில் கஞ்சாபோதைப் பொருளுடன் பெண் ஒருவர் புதன்கிழமை (04) பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொரவ்பொத்தானை பிரதேசத்தை சேர்ந்த 65 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொரவ்பொத்தானை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 01 கிலோ 10 கிராம் கஞ்சா போதைப் பொருள் , பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரவ்பொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 4,450 போதைக் குளிசைகளுடன் இருவர் கைது

சீதுவ பகுதியில், சுமார் 4450 போதைக் குளிசைகளை காரில் ஏற்றிச் சென்ற இரண்டு சந்தேக நபர்கள், புதன்கிழமை (04) அன்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கிரிபத்கொடை, கந்தான பகுதிகளைச் சேர்ந்த 42 மற்றும் 51 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது. பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



மேலும், கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக சீதுவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 9 அடி நீளமான முதலை மீட்பு

■ க. அகரன்

வவுனியா கொக்குவெளி பகுதியில் வீடொன்றின் வளவில் இருந்து 09 அடி நீளமான முதலை ஒன்று வனஜீவராசிகள் திணைக்களத்தினால் புதன்கிழமை (04) மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டிற்குப் பின்புறம் உள்ள தோட்ட பகுதியில் முதலையொன்று இருப்பதை அவதானித்த, வீட்டின் உரிமையாளர் , அதனைத் துரத்துவதற்கு முற்பட்ட போது காணியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட கிணற்றில் முதலை விழுந்துள்ளது. இதையடுத்து, அவர் வனஜீவராசிகள் திணைக்களத்திற்குத் தகவல் வழங்கிய பின்னர் குறித்த பகுதிக்குச் சென்ற வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கிணற்றில் இருந்து முதலையைப் பிடித்துச் சென்றிருந்தனர்.



# உணவு நிறுவனங்களில் திடீர் சோதனை

■ நூருல் ஹுதா உமர்

உலக உணவு பாதுகாப்பு தினத்தை ( ஜூன் -7 ) முன்னிட்டு

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட உணவு கையாளும் நிறுவனங்கள் வியாழக்கிழமை (05) அன்று சோதனை செய்யப்பட்டது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல் .எம். ஜெரீன் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்த பரிசோதனை, உணவுப் பொருட்களின் தரம், பராமரிப்பு நிலை, சமையலறையின் சுத்தம் சுகாதாரம், உணவு செய்முறைகள் மற்றும் வேலை செய்பவர்களின் மருத்துவச் சான்றிதழ்கள் போன்றன கண்காணிக்கப்பட்டன. இதன் போது உணவு கையாளும் மூன்று நிறுவனங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு



நிறக் குறியீடுகள் இல்லாத உணவுகள், முறையாக பொதி செய்யப்படாத உணவுகள், மருத்துவ சான்றிதழ் இல்லாது உணவு கையாளும் நபர்கள் போன்ற குற்றங்கள் கண்டறியப்பட்டு உணவுகள் கைப்பற்றப்பட்டதுடன் உணவக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

# மூன்று கோடி பெறுமதியுடைய பொருட்கள் பறிமுதல்

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட சுமார் மூன்று கோடி ரூபாய் பெறுமதியுடைய பொருட்கள் தொகையை, கல்பிட்டி, குடாவ கடற்கரையில் வைத்து லொறியொன்றுக்குள் ஏற்றும் போது, கல்பிட்டி பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் 2 கோடி 40 இலட்சம் பெறுமதியுடைய, 1040 கிலோ கிராம் என்செல், 5 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 100 கிலோ கிராம் மஞ்சள் மற்றும் பச்சை மஞ்சள், 25 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய 25,800 வெளிநாட்டு தயாரிப்பு சிகரெட்டுகள் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய மின் உபகரணங்கள் அடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது, குறித்த லொறியின் ஓட்டுநர் தப்பி ஓடிய நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வை அவசரப்படுத்தவும்

வடக்கில், தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல், மீன் வளத்தை அள்ளிச் செல்வது, வடக்கு மீனவர்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். தற்போது, கிழக்கு மீனவர்கள் மீதான அட்டூழியங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன என்பது அண்மையில் நடைபெற்ற சம்பவங்களை வைத்துப் பார்க்கும் போது புரிகிறது.

வடக்கு, கிழக்கு, தெற்கு உள்ளிட்ட நாட்டின் பல திசைகளிலும் கடற்படையினர் பாதுகாப்பு கடமைகளிலும் ரோந்து சேவைகளிலும் ஈடுபட்டுள்ளனர். தென்னிலங்கையை பொறுத்தவரையில், போதைப்பொருள் கடத்தப்படும் போது மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

வடக்கில், கடல் எல்லையை அத்துமீறும் தென்னிந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர். அத்துடன், கேரள கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களைக் கடத்துவோரும் கைது செய்யப்படுகின்றனர். எனினும், சுருக்கு வலையை பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்டார் என குற்றஞ்சாட்டப்பட்ட மீனவர் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ள சம்பவம் கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை, புல்மோட்டையில் இருந்து மீன்பிடிக்கச் சென்றவர்கள் மீது கடற்படையினர், செவ்வாய்க்கிழமை(03) அன்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குச்சவெளி ஜாஜா நகர் பிரதேசத்தில் பள்ளிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதான அய்யூப் கான் ஜனூஸ் என்ற இளைஞனே காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டது. அத்துடன், திருகோணமலையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், விசாரணை அறிக்கை கிடைத்ததன் பின்னரே ஒரு முடிவுக்கு வர முடியும் என மீன்பிடித்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், திருகோணமலை, திருக்கடலூர் மீனவர் வாழைச்சேனை மீனவர்களால் தாக்கப்பட்டதை கண்டித்து,தாக்குதலில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்யுமாறு கோரிக்கை, புல்மோட்டையில் மீனவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வியாழக்கிழமை(05) ஈடுபட்டிருந்தனர்.

மீன்களின் விலைகள் எகிறியுள்ளன. சந்தைக்கு மீன்களுக்கான பற்றாக்குறை, மோசமான காலநிலை காரணமாக, மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே, மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவார்களாயின் அவர்களின் குடும்பங்கள் நெருக்கடிக்கு உள்ளாகும். அத்துடன், சந்தைகளில் மீன்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும். மீன்களின் விலைகள் இன்னும் இன்னும் அதிகரிக்கும்.

மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு கடற்படையினருக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை. இந்நிலையில், புல்மோட்டையில் மீனவர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு, உரிய தண்டனை வழங்க வேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்ட மீனவருக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமன்றி, தடை செய்யப்பட்ட வலைகள், படகு இயந்திரங்களைச் சந்தைகளில் இருந்து அகற்ற வேண்டும். கைப்பற்றப்படும் சட்டவிரோதமான பொருட்கள், நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அழிக்கப்படவேண்டும். அதனூடாகவே மீனவர்களின் இவ்விரு பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை 23

# 1960களின் பொருளாதார நிலைவரம்

ஐம்பதுகளின் பிற்பகுதியில் மறைமுக மற்றும் நேரடி வர்த்தகம் மற்றும் கொடுப்பனவுக் கட்டுப்பாடுகளை படிப்படியாக, சரியான நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் இலங்கை அரசாங்கம் ஏற்றுமதி-இறக்குமதி சமநிலையை அடைய முடிந்திருந்தால், பிந்தைய காலம் முந்தைய காலத்துடன் ஊடுருவ முடியாததாக இணைந்திருக்கும். இருப்பினும், 1950களின் நியாயமான விரைவான பொருளாதார வளர்ச்சியுடன் அந்நியச் செலாவணிச் சமநிலையை சரிசெய்யத் தவறியதன் விளைவாக 1961இல் வேறுபட்ட பொருளாதாரச் சூழல் உருவாக்கப்பட்டது. வர்த்தக விதிமுறைகள் தொடர்ந்து சாதகமற்றதாக இருந்ததால், அந்நியச் செலாவணி நிலைமையும் இந்தக் காலகட்டத்தில் மிகவும் மோசமாக இருந்தது.

1960களின் முற்பகுதியில் நடப்புக் கணக்கு செலுத்துகை இருப்பு தொடர்ச்சியான பற்றாக்குறையில் இருந்தது. வர்த்தகப் பற்றாக்குறை ஆண்டுக்கு சராசரியாக ரூ.156 மில்லியனாக இருந்தது. ஏற்றுமதியின் அளவு ஆண்டுக்கு கிட்டத்தட்ட 4% அதிகரித்து 1964இல் 1954-56 அளவை விட 20% அதிகமாக இருந்தபோதிலும், விலைகள் வீழ்ச்சியடைந்ததால் 1964இல் ஏற்றுமதி வருவாய் இன்னும் 1954-56 மட்டத்திலேயே இருந்தது. 1960ஆம் ஆண்டில் இலங்கையின் வர்த்தக வருமானத்தில் ஏற்பட்ட சரிவு தீவிரமடைந்தது, அப்போது நாட்டின் பாதகமான வர்த்தக இருப்பு ரூ.210 மில்லியனாக புதிய உச்சத்தை எட்டியது மற்றும் நிகர வெளிநாட்டு சொத்துக்கள் ரூ.422 மில்லியனாகக் குறைந்தன. 1960 மற்றும் 1964க்கு இடையில், ஏற்றுமதி இறக்குமதிக்கு இடையிலான இடைவெளி - அந்நியச் செலாவணி செலவுக்கும் மொத்த அந்நியச் செலாவணி வருவாய்க்கும் இடையிலான வேறுபாடு - ஆண்டுக்கு ரூ.200 மில்லியனாக இருந்தது. 1960களின் பிற்பகுதியிலும் 1970களின் பிற்பகுதியிலும் நெருக்கடி விகிதங்களை எட்டிய இந்தப் பிரச்சினைகள், 1960களின் முற்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் போது தெளிவாக வெளிப்பட்டன. ஆனால் அரசாங்கம் இந்த ஆரம்ப எச்சரிக்கை அறிகுறிகளைப் பொருளாதாரத்தின் சிதைந்த கட்டமைப்பிலிருந்து தோன்றியதாகப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டது. அவை வெறும் கடந்து செல்லும் மேகங்கள் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தது.

1960 முதல், அரசாங்கத்தின் கொள்கை இறக்குமதி வரிகள், இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் பரிமாற்றக் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் செலுத்துகை சமநிலை சிக்கலைக் கட்டுப்படுத்துவதாகும். 1960 பட்ஜெட்டில் கார்கள், பெட்ரோல், மதுபானம் மற்றும் புகையிலை மீதான இறக்குமதி வரிகள் அதிகரித்தன. 1961 பட்ஜெட்டில் இறக்குமதி வரிகள் 5% கூடுதல் வரியாக அதிகரித்தன. அதே ஆண்டில், மோட்டார் கார்கள், கடிகாரங்கள் மற்றும் கடிகாரங்கள், ரேடியோக்கள் மற்றும் அதிக விலை கொண்ட உடைகளின் இறக்குமதி முற்றிலும் தடைசெய்யப்பட்டன. ஆடம்பரப் பொருட்களில் தொடங்கி அனைத்திற்கும், இறக்குமதி கட்டுப்பாடுகள் விரைவாக வந்தன. அவை அனைத்தும் ஆடம்பரப் பொருட்களைத் தடை செய்யப்பட்டன, மேலும், கிட்டத்தட்ட 50% ஆடம்பரமற்ற பொருட்கள் இறக்குமதி கட்டுப்பாட்டாளரின் உரிமங்களுக்கு உட்பட்டவை. விரைவில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், எரிபொருள், உரங்கள் மற்றும் மருந்துகள் தவிர அனைத்து பொருட்களும் இறக்குமதி உரிம நடைமுறைகளுக்கு உட்பட்டன. கடுமையான வரிகள் மற்றும் விதிக்கப்பட்ட நேரடி கட்டுப்பாடுகள் காரணமாக, அனைத்து பொருட்களின் இறக்குமதியும் மிகவும் கடுமையாகக் குறைந்தது.

கடுமையான இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக, பல வகை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பற்றாக்குறை மற்றும் விலைகள் உயர்ந்தன. அனைத்து நுகர்வோர் பொருட்களுக்கும் ரேஷன் முறையை ஏற்படுத்துவதன் மூலம் அரசாங்கம் பதிலளித்தது. உலர்ந்த மீன் மற்றும் மாலத்தீவு மீன்கள் கூட (இரண்டும் இறக்குமதி செய்யப்பட்டவை) முதல் முறையாக ரேஷன் முறையில் விற்கப்பட்டன. நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட இந்த புதிய வணிகக் கட்டுப்பாட்டின் மற்றொரு விளைவாக, வாசனைத் திரவியங்கள் மற்றும் கழிப்பறைப் பொருட்கள், பதிவு செய்யப்பட்ட பழங்கள் மற்றும் ஜாம்கள், ஊறுகாய், சாக்லேட்டுகள், சவர்க்காரம், ரேஸர் பிளேடுகள், மருந்துகள், ரேடியோக்கள் மற்றும் மின் பொருட்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் பல புதிய உள்ளூர் நுகர்வுப் பொருட்களுக்கான தொழில்கள் தோன்றின.

மோசமடைந்து வரும் அந்நியச் செலாவணி நிலைமை மற்றும் நாட்டின் வெளிநாட்டு சொத்துக்களின் குறைவு ஆகியவற்றிலிருந்து மற்றொரு புதிய வளர்ச்சி ஏற்பட்டது. ஏப்ரல் 1961இல், அரசாங்கம் முதன்முறையாக சர்வதேச நாணய நிதியத்திலிருந்து (ஐஎம்எவ்) ரூ.54 மில்லியனை கடனாகப் பெற்றது. இது இலங்கையின் சுதந்திரத்துக்குப் பிந்தைய பொருளாதார வரலாற்றில் முக்கியமானதொரு புள்ளியாகும். அரசாங்கம் பிப்ரவரி 1962இல், மீண்டும் அதேயளவு தொகையை ஐஎம்எவ்விடமிருந்து வாங்கியது, இது முதல் கடன் தவணையாகும். உணவுக்கான மானியத்தைக் குறைக்க இலங்கை அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை ஐஎம்எவ் வரவேற்றது, அரசு வழங்கும் பல்வேறு நலத்திட்டங்களை மேலும் சுயநிதியாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது, மேலும் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளை இலங்கை தாராளமயமாக்கும் என்று நம்பியது.

1962ஆம் ஆண்டு பட்ஜெட்டில், நிதியமைச்சர் ஒரு எச்சரிக்கை விடுத்தார். “ஆடம்பர இறக்குமதிகளைக் குறைப்பது ஒட்டுமொத்த அந்நியச்செலாவணி இருப்பில் சிறிதளவு தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது. ஏற்றுமதியில் எதிர்பார்க்கப்பட்ட ஏற்றம் ஏற்படவில்லை. நாடு, பொருளாதாரம் மீண்டு வரும் வரை காத்திருக்க முடியாது. ஒவ்வொரு சோசலிச நாடும் தியாகத்தின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை மனதில் கொள்ளுமாறு நான் நாட்டைக் கேட்டுக்கொள்கிறேன்” என்றார். பின்னர் வாராந்த அரிசி விநியோகத்தைப் பாதியாகக் குறைக்கும் அவரது முன்மொழிவை வெளிப்படுத்தினார். இந்தக் குறைப்பை ஈடுசெய்ய, கணிசமாக அதிக கோதுமை மாவை வழங்கத் தயாராக இருப்பதாக அவர் கூறினார். இவ்வாறுதான் அவர் அந்நியச்செலாவணி இருப்பு மீதான அழுத்தத்தைக் குறைக்க முயன்றார். ஆனால் அரிசியின் அளவின் இந்த சிறிய குறைப்பு கூட, 1953ஆம் ஆண்டு அரிசியின் காரணமாக அதிகாரத்திலிருந்து வீழ்ந்த டட்லி சேனநாயக்க தலைமையிலான எதிர்க்கட்சியால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. அமைச்சரின் முன்மொழிவு அவரது சொந்த நாடாளுமன்றக் குழுவினால் கூட நிராகரிக்கப்பட்டது. இதன் விளைவாக, அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார், இலங்கையில் அரிசி என்பது அரசியல் மட்டுமல்ல, உண்மையிலேயே பழிவாங்கும் தெய்வமாகும் என்ற மக்களின் நம்பிக்கை தொடர்ச்சியாக உண்மை என நிரூபிக்கப்பட்டு வந்துள்ளது.

புதிய நிதியமைச்சர் 1963-64ஆம் ஆண்டில் வணிக வருவாய் வரியை (BTT) அறிமுகப்படுத்தினார். அந்த நேரத்தில் டீவுவு என்பது சில்லறை விற்பனைப் பொருட்களுக்கு 2% வரியும், ஒரு வணிகத்தின் வருவாய் ஆண்டுக்கு ரூ.75,000 ஐத் தாண்டும்போது, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு 3% வரியும் விதிக்கப்பட்டது. இந்த வரி விற்பனை விலையை உயர்த்தியது, உற்பத்தியைக் குறைத்தது மற்றும் மறைமுகமாக அது பொருந்தும் வணிகங்களின் பெருநிறுவன வரி மற்றும் சேமிப்புத் திறனைக் குறைத்தது. இந்தக் காலகட்டத்தில் அரசாங்கம் விதித்த ‘மூடப்பட்ட’ பொருளாதாரத்தின் சூழலில் இதுபோன்ற வரியை நியாயப்படுத்த முடியாது. இருப்பினும், அடுத்தடுத்த அரசாங்கங்கள் அதை பெரிதும் நம்பியிருந்தன் அதன் அளவு 2% இலிருந்து 35%ஆக அதிகரிக்கப்பட்டது, இறுதியில் அது அரசாங்க வருவாயின் முதன்மை வடிவங்களில் ஒன்றாகும். 1964ஆம் ஆண்டில் ரூ16 மில்லியனை ஈட்டிய BTT, 1975ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு ரூ.600 மில்லியனை ஈட்டியது, இது அதன் மொத்த வருவாயில் எட்டில் ஒரு பங்கு. 1965ஆம் ஆண்டு வாக்கில், உலகின் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் இலங்கை மிகவும் அதிகமாக வரி விதிக்கப்பட்ட நாடாக உருவெடுத்தது. 1964ஆம் ஆண்டில், தனது குறைந்து வரும் நிலையை வலுப்படுத்துவதற்காக, திருமதி பண்டாரநாயக்க ட்ரொட்ஸ்கிச சமசமாஜக் கட்சியை மூன்று அமைச்சுகளை வழங்கி அரசாங்கத்தில் சேர அழைத்தார். சமசமாஜக் கட்சியின் தலைவரான டாக்டர் என்.எம். பெரேரா புதிய நிதி அமைச்சரானார். என். எம். பெரேரா 1964இல் தனது முதலாவது பட்ஜெட்டை சமர்ப்பித்தார். அந்நியச் செலாவணி நெருக்கடியைச் சமாளிக்க ஏராளமான பொருளாதார மாற்றங்களை அவர் முன்மொழிந்தார். அவை முற்போக்கானதாக இருந்தன. ஆனால் அதை நடைமுறைப்படுத்த போதிய கால அவகாசம் இருக்கவில்லை. அவர் பதவியேற்ற ஆறு மாதங்களுக்குள் தேர்தல் வந்தது. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 1965இல் ஆட்சிக்கு வந்தது.



## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்கறை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றி விடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்து போன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களில் இருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை.

இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே, சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகி விட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

– பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கழிதங்கள்

### கடலரிப்பால் மக்கள் அச்சம்

காரைதீவு கடற்கரைப் பிரதேசங்களில் பாரிய கடலரிப்பு மீண்டும் ஏற்பட்டுள்ளதுடன், புதன்கிழமை (04) அன்று ஏற்பட்ட பாரிய கடலரிப்பால் அங்குள்ள நினைவுத்தூபி கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

கடலரிப்பு மிகவும் தீவிரமாக இருப்பதால் காரைதீவு கடற்படை முகாம், தினந்தினம் கடலுக்குள் உள்வாங்கப்பட்டுக்கொண்டு வருகிறது. அத்துடன், பல தென்னை மரங்களைக் கடல் காவு கொண்டிருக்கிறது. மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றதுடன் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாதுள்ளது. அவர்களது வாழ்வாதாரமும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதேச வாசிகள் கருத்து தெரிவிக்கையில்,

“இந்தப் பாரிய ஆபத்தை யாரும் கண்டு கொள்வதில்லை. ஒலுவில் துறைமுகம் வந்ததால் இப்பகுதி எங்கும் இந்த கடலரிப்பு கூடுதலாக இருக்கிறது.

எனினும், அரசியல்வாதிகளின் முயற்சியால் நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை போன்ற பிரதேசங்களில் பாரிய முண்டுக்கற்களை இட்டு அப்பிரதேசங்களைப் பாதுகாத்தார்கள். அது அவர்களின் உரிமை. சேவை. ஆனால் மத்தியில் இருக்கின்ற காரைதீவு கடற்கரை மிகவும் மோசமான நிலையில் உள்ளது.” என தெரிவிக்கின்றனர்.

மேலும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

– வி.ரி.சகாதேவராஜா




# காலத்தின் கோலம்



வழக்குரைகள் காலம் காலமாக
நடந்து வருகிறது..!
உப்பு நீரில் விளக்கேற்றி
ஊர் கூடிப் பொங்கலிட்டு
நாம் மன்றாடி அழைக்கும் தாயே
இந்த முறையேனும் வா..!
தேசத்தில் மலிந்து கிடக்கும்
வழக்குகள் எல்லாவற்றையும்
நீதிமன்றங்களுக்கு ஏற்றி
வாதிடுவோம்..!
பதாகை ஏந்தி
பதாகை ஏந்தி
கைகள் வலிக்கிறது
தாயாரே
காலம் சலிக்கிறது..!
வா வா
நீயும் ஒரு பெண்தானே
என் மனம் அறிவாய்..!
ஆண்டுக்கு ஒரு படையல்
இந்த முறை தவிர்
நாம்
ஆளுக்கொரு தேநீரில்
பசியாற்றி
நீதி கேட்போம்..!
– வி.அபிவர்ணா

# கீழ்காய் நெல்லி...



அதிகாலையில்தான்
ஒரு முத்தத்தை
மேலதிகமாக கொடுத்தும் இருந்தேன்..!
காலை மாலை இரவு என
தவறாது முத்தங்களை
பரிந்துரை இல்லாமல்
கொடுத்து வருதல்
என் பழக்கத்தின் நியாயம்..!
பூரணை விடுமுறையெல்லாம்
கிடையாது..!
ஊரைத் தாண்டிய பயணம்
நிறுத்தப்பட்டது
அவளை எல்லோரும்
பைத்தியக்காரி
என்றதன் பின்னர்தான்..!
அவள் நான்
நான் அவள்
என்றாகிய வாழ்தலில்
நாங்கள் நலமாகத்தான் உள்ளோம்..!
மூடிவிட முடியாத ஊர் வாயை
வேம்பின் பிசின் கொண்டு
ஒட்டிவிடவா முடியும்..!
அதிகாலையில் கொடுத்த
முத்தத்தின் சூட்டோடு
கீழ்காய் நெல்லி இலையையும்
அரைத்து தலையில் தடவி விட்டேன்..!
நேரமாகிறது
கொஞ்சம் காத்திருங்கள்
உங்களைத்தான்.
அவளை குளிப்பாட்டி விட்டு
வருகிறேன்..!
– காரையன் கதன்



SLT–MOBITEL முதல் காலாண்டில்

# நிலையான இலாப வளர்ச்சி பதிவு



SLT குழுமம், 2025 மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த முதல் காலாண்டு பகுதியில் வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 2,001மில்லியனை பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. 2024 முதல் காலாண்டு பகுதியில் பதிவாகியிருந்த ரூ. 156 மில்லியனுடன் ஒப்பிடுகையில், இந்தப் பெறுமதி பெருமளவு உயர்வடைந்துள்ளது. அதனூடாக வினைத்திறனான நிதிசார் முகாமைத்துவம் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு வினைத்திறன் போன்றன பிரதிபலிக்கப்பட்டுள்ளன.

2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், SLT குழுமம்உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்தது. குறிப்பாக, வருமானம் 3.4% இனால் உயர்ந்து ரூ. 27,851 மில்லியனாக பதிவாகியிருந்தது. இந்த வளர்ச்சியில் மொபிடெலின் வருமான அதிகரிப்பினூடான பங்களிப்பு அதிகம் காணப்பட்டதுடன், SLT PLC இன் வருமானம் நிலையானதாக பதிவாகியிருந்தது.

குழுமத்தின் செலவு மேம்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவை நேர்த்தியான பெறுபேறுகளை எய்துவதில் பங்களிப்பை வழங்கியிருந்தன. தொழிற்பாட்டு செலவுகள் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2.9% இனால் குறைந்து ரூ. 710 மில்லியனாக பதிவாகியிருந்தது. இந்த செலவு மேம்படுத்தல் மற்றும் வருமான வளர்ச்சி ஆகியன இணைந்து, EBITDA இல் 13% உயர்வை ஏற்படுத்தி ரூ. 10,443 மில்லியனை பதிவு செய்ய ஏதுவாக அமைந்திருந்தது.

நிறுவனமட்டத்தில், SLT PLC இன் வருமானம், 2024 முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 0.7% இனால் உயர்ந்து ரூ. 117 மில்லியனை பதிவு செய்திருந்தது. இதில் பிரதானமாக நிறுவனங்கள், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்கள் (SMEs) மற்றும் புரோட்பான்ட் பிரிவுகள் பங்களிப்புச் செய்திருந்தன.

SLT PLC பெருமளவு செலவு குறைப்புகளையும் பதிவு செய்திருந்தது. தொழிற்பாட்டு செலவுகள் 5.2% இனால் குறைந்து ரூ. 838 மில்லியனாக பதிவாகியிருந்தது. குறிப்பாக, மின்சார செலவுகள் 2024 மார்ச் மற்றும் ஜூலை மாதங்களில் கட்டணக் குறைப்புகள் ஏற்படுத்தப்பட்டமையினால், 38.3% இனால் வீழ்ச்சியடைந்திருந்தன. வாகன வாடகை மற்றும் எரிபொருள் செலவுகளும் 22.7% இனால் குறைந்திருந்தன. பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகளும் 12.5% இனால் குறைந்திருந்தது.

குறிப்பாக SLT PLC சிறந்த இலாப வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. வரிக்கு பின்னரான இலாபம் 369.9% இனால் உயர்ந்து ரூ. 1,344 மில்லியனாக பதிவாகியிருந்தது. 2024 முதல் காலாண்டில் இந்தப் பெறுமதி ரூ. 286 மில்லியனாக பதிவாகியிருந்தது. வரிக்கு முந்திய இலாபத்தில் குறிப்பிடத்தக்களவு உயர்வு பதிவாகியிருந்தது. இந்தப் பெறுமதி 380% இனால் உயர்ந்து ரூ. 1,920 மில்லியனாக பதிவாகியிருந்தது. தொழிற்படு இலாபம் 60.3% இனால் உயர்ந்து ரூ. 2,538 மில்லியனாக பதிவாகியிருந்தது.

2025 முதல் காலாண்டில் மொபிடெல் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்தது. டேட்டா சேவைகளின் வளர்ச்சியினூடாக, குறிப்பிடத்தக்களவு வருமான வளர்ச்சியை எய்தியிருந்தது. மொத்த வருமானம் ரூ.11.8 பில்லியனை எய்தியிருந்தது. அதனூடாக, டிஜிட்டல் இணைப்புக்கான கேள்வியை நிறுவனம் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்ததை பிரதிபலித்திருந்தது. மேம்படுத்தப்பட்ட வருமான செயற்பாடுகளுடன், வினைத்திறனான செலவுக்கு குறைப்பு செயற்பாடுகளினூடாக, இலாபகரத்தன்மையில் பெருமளவு முன்னேற்ற நிலை பதிவாகியிருந்தது.

EBITDA பெறுமதி 28.5%இனால் அதிகரித்திருந்தமையினால், ஆரோக்கியமான EBITDA எல்லைப் பெறுமதியான 30%பதிவாகியிருந்தது. தொழிற்படு இலாபமும் (EBIT) குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியான 392%ஐ பதிவு செய்திருந்ததுடன், 7% EBIT எல்லைப் பெறுமதியையும் எய்தியிருந்தது. வரிக்கு முந்திய இலாபமும் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை எய்தியிருந்தது.

நிறுவனம் தனது நிதிநிலையை வெற்றிகரமாக மாற்றியமைத்திருந்தது. 2024 முதல் காலாண்டில் பதிவு செய்திருந்த தேறிய இழப்பு என்பதிலிருந்து, 2025 இன் அதே காலப்பகுதியில் ரூ.477 மில்லியன் தேறிய இலாபத்தை எய்தியிருந்தது.

வவுணதீவில் கொமர்ஷல் வங்கியின்

# விவசாய நவீனமயமாக்கல் கிராமத் திட்டம்





கொமர்ஷல் வங்கியானது அண்மையில் கிளிநொச்சியின் மகிழங்காட்டில் மேற்கொண்ட முன்னோடி விவசாய நவீனமயமாக்கல் கிராமத் திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வவுணதீவை இலங்கையில் அதன் இரண்டாவது ‘விவசாய நவீனமயமாக்கல் கிராமமாக’ தேர்ந்தெடுத்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் விவசாய நவீனமயமாக்கல் கிராமத் திட்டமானது, கிராமங்களில் விவசாயத் துறையில் தொழில்நுட்பத்தைப் பரப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு இலட்சியப் பணியாக திகழ்வதுடன் இது, நாட்டிலுள்ள விவசாயத்திற்கான அனைத்து திறன்களையும் உள்ளடக்கியது. நாற்று நடுதல், ட்ரோன் பயன்பாடு மற்றும் காலநிலைக்கு ஏற்ற பயிர் வகைகளை நடுதல் போன்ற மேம்பட்ட நுட்பங்களை அணுகுவதை எளிதாக்குகிறது. அத்துடன் இது உற்பத்தித்திறன் மற்றும் இலாபத்தை அதிகரிக்கும்; மேலும் இந்த நவீன மய திட்டமானது திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி; வங்கியுடன் நேரடி ஈடுபாட்டின் மூலம் நிதி உள்ளடக்கம் மற்றும் கடன் அணுகல்; சிறந்த விளைச்சல் மற்றும் புதிய சந்தைகளுக்கான அணுகல் மூலம் மேம்பட்ட வாழ்வாதாரங்கள்; விவசாய நிலங்களின் நீண்டகால நம்பகத்தன்மையை உறுதி செய்யும் நிலையான நடைமுறைகள்; மற்றும் சமூக ஆதரவு மற்றும் வலையமைப்பு ஆகியவற்றை உள்ளடக்குகிறது.


கொமர்ஷல் வங்கியானது வவுணதீவில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் கல்வி மற்றும் விவசாய நிறுவனங்களுடனான ஒத்துழைப்பானது மதிப்புமிக்க அறிவுப் பகிர்வு சூழலை வளர்ப்பதாக வங்கி தெரிவித்துள்ளது.

வவுணதீவில் மேற்கொள்ளப்பட்ட விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக இயந்திரங்களைப் பயன்படுத்தி நெல் நாற்றுகளை நடவு செய்வது தொடர்பான பயிற்சி அமர்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் வவுணதீவு விவசாயிகள் அமைப்பின் உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அதிகாரிகள் மற்றும் மட்டக்களப்புப் பகுதி விவசாய நிபுணர்கள் உட்பட அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஜே.ஜே.முரளீதரன், விவசாயத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன், கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் டி.கிரிதரன், விவசாயத் துறையின் மேலதிக பணிப்பாளர் ஏ.காயத்ரி மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் என்.சத்தியானந்தி ஆகியோர் அடங்குவர். மேலும், கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட பிரதிநிதிகளில் வங்கியின் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் டி.கஜரூபன் மற்றும் அபிவிருத்திக் கடன் திணைக்களத்தின் முகாமையாளர் டபிள்யு.டி.சி.லசந்த ஆகியோர் அடங்குவர்.

பாரம்பரிய விவசாய முறைகள் மற்றும் விவசாயத் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் புதுமையான தொழில்நுட்பங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கும், அடுத்த தலைமுறையினரை புத்திசாலித்தனமான விவசாய நடைமுறைகளை மேற்கொள்வதற்கு அறிவூட்டுவதற்கும், தூண்டுவதற்கும் இந்த வகையான நிகழ்வுகள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது.

# வாழ்வின் உட்பொருளை வெளிப்படுத்தும் ஹஜ்



ஈதுல் அள்ஹா எனும் தியாகத் திருநாள் ‘ஹஜ்’ பெருநாளாகவும் அமைந்துள்ளது. ‘ஹஜ்’ என்ற சொல்லுக்குச் ‘சந்திக்க நாடுதல்’ என்பது பொருளாகும். ஹஜ்ஜின்போது உலகெங்குமுள்ள மக்கள் “கஃபா இறை இல்லத்தைச் சந்திக்க நாடி வருவதால் ‘ஹஜ்’ என அழைக்கப்பட்டது.

ஐம்பெரும் இஸ்லாமியக் கடமைகளில் ஐந்தாவது இறுதிக் கடமையாக அமைந்திருப்பது ஹஜ் கடமை. எல்லோருக்குமுரிய கடமையாயினும் உடல் நலமும் பொருள் வசதியுமுள்ளோருக்குக் கட்டாயக் கடமையாகும்.

துல்ஹஜ் மாதத்தில் உலகெங்குமுள்ள முஸ்லிம் மக்கள் ஒரே இறைவனாகிய அல்லாஹ்வை வணங்குவதற்கென மக்காவில் அமைந்துள்ள ‘கஃபா’ இறையில்லம் சென்று இறைவணக்கம் புரிவதே ஹஜ் ஆகும்.

உலகிலுள்ள அத்தனை பள்ளிவாசல்களுக்கும் தாய் போன்றது கஃபா இறையில்லம். ஆனால், உலகிலுள்ள பள்ளிவாசல்கள் அனைத்தின் அமைப்புக்கும் தன்மைக்கும் முற்றிலும் மாறுபட்டதாக கஃபா விளங்குகிறது. உலகெங்குமுள்ள பள்ளிவாசல்களில் இறை வணக்கம் புரிவோர் கஃபா இருக்கும் திசையை நோக்கியே தொழுவர். ஆனால், கஃபா இறையில்லத்தில் வணக்கம் புரிவோருக்கு திசை கட்டுப்பாடு ஏதுமின்றி எல்லாத் திசைகளிலும் கஃபாவைச் சுற்றி வட்டவடிவமாக நின்று தொழுகின்றனர்.

### வாழ்வின் உட்பொருளை வெளிப்படுத்தும் ஹஜ்

ஹஜ் என்பது மனித வாழ்வின் சூட்சம நோக்குகளை செயல்பூர்வமாக வெளிப்படுத்தும் ஒன்றாகும். ஹஜ் பயணம் மேற்கொள்வோர் தாங்களே பாடுபட்டு நேர்மையான முறையில் தேடிய பொருளைச் செலவிட்டே ஹஜ் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

ஹஜ் கடமையை நிறைவேற்ற பயணம் மேற்கொள்வோர் எல்லாவித உலகியல் பற்றுகளையும் விட்டொழித்தவராக இறைவனையும் இறையில்லச் சிந்தனையையும் தவிர, மற்ற எதையும் நினைக்காதவராகத் தன் ஹஜ் கடமையை நிறைவேற்றுகிறார். இது அவரது மறுமையின் பயணத்தை அவருக்கு நினைவூட்டுவதாக அமைகிறது.

தனது குடும்பம், உற்றார் உறவினர், சொத்து சுகம் அனைத்தையும் துறந்தவராக கஃபா இறை இல்லம் நோக்கி ஹஜ் பயணம் செல்பவர் தனது மரணப் பயணத்தையே நினைவு கூர்பவராகிறார்.

ஹஜ் பயணம் செய்வோர் கஃபாவிலிருந்து ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் இருந்தே தனது ஆடம்பர ஆடை அணிகலன் அனைத்தையும் களைந்துவிட்டு தைக்கப்படாத சாதாரண துணியிலான இரு வெள்ளைத் துண்டுகளை மட்டுமே அணிகிறார்கள். இவ்வாறு அரசராயினும், ஆண்டியாயினும் எல்லாரும் ஒரே மாதிரியான ‘எஹ்ராம்’ எனும் தைக்கப்படாத வெள்ளுடை உடுத்தியே இறையில்லம் செல்ல வேண்டும். இதே உடைதான் இறந்த சடலத்துக்கும் (மையத்) போர்த்தப்படுகிறது. எனவே, இந்த எஹ்ராம் எனும் வெள்ளுடை அணியும் ஹஜ் பயணி தனது மரணத்தையே நினைவு கூர்பவராகிறார்.

### ஒருமை உணர்வு தரும் கஃபா இறையில்லம்

ஹஜ்ஜின்போது லட்சக்கணக்கான முஸ்லிம்கள் கஃபா இறையில்லத்தில் கூடுகின்றனர். எல்லோருமே ஒரேமாதிரி சீருடையில் தைக்கப்படாத இரு துண்டுத் துணிகளை அணிந்தவர்களாக காட்சி தருகின்றனர். பல்வகைப்பட்ட மொழிகளைப் பேசுபவர்களாக இருந்தபோதிலும் அங்கு ஒரே மொழியில் அரபியில் இறை வணக்கம் புரிகின்றனர். வேற்றுமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட மகத்தான ஒற்றுமையை சமத்துவத்தை சொல்லிலும், செயலிலும் இறைவன்முன் நிலைநாட்டுகின்றனர்.

### ஹஜ் கடமை நிறைவேற்றம்

கஃபா இறையில்லத்தை ஹஜ் செய்வோர் ஏழு முறை ‘தவாப்’ சுற்ற வேண்டும். ‘தவாப்’ என்ற அரபுச் சொல்லுக்கு ‘சுற்றி வருதல்’ என்பது பொருளாகும். அதன்பின் அருகிலுள்ள ஜம்ஜம் கிணற்று நீரைக் குடித்து விட்டு சஃபா மருவா என்னும் இரு குன்றுகளிடையே ஏழு முறை தொங்கலோட்டம் ஓட வேண்டும்.

இக்கடமைகளை இனிது நிறைவேற்றிய ஹாஜிகள் அடுத்து மக்காவிலிருந்து சற்று தொலைவில் அமைந்துள்ள மினா என்னுமிடத்தை அடைந்து, தங்கி இறைவணக்கம் புரிவார்கள்.

அடுத்த நாள் வைகறையில் தொழுகையை முடித்துக் கொண்டு, அங்கிருந்து அருகில் உள்ள அரஃபாத் பெரு வெளியில் ஹாஜிகள் குழுமுகிறார்கள்.

ஹஜ் கடமையே இங்குதான் முழுமையாக நிறைவேற்றப்படுகிறது. ஒரே மாதிரியான வெள்ளைச் சீருடை அணிந்த லட்சக்கணக்கான ஒரே மாதிரியான கூடாரங்களில், ஒரே மாதிரியான வெள்ளை எஹ்ராம் உடையில் தங்கிப் பிரார்த்தனை செய்கின்றனர்.

### உலக ஒருமைப்பாட்டு மாநாடு

ஹஜ்ஜின்போது, குழுமும் ஹாஜிகள் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாயிருந்தும், பல்வேறு விதமான மொழிகளையே பேசுபவர்களாயிருந்தும் வெவ்வேறு விதமான கலாசார அடிப்படையில் ஆடை அணிகளை அணியும் வழக்கமுடையவர்களாயிருந்தும், பல்வேறு இனங்களைச் சார்ந்தவர்களாயிருந்தும் ஏழை-பணக்காரன், அரசன் - ஆண்டி என்ற பொருளாதார வேற்றுமைக்கு உட்பட்டவர்களாயிருந்தும் கருப்பன் வெள்ளையன் நிற பேதமுடையவர்களாயிருந்தும் இறையில்லத்தின் முன் இந்த வேறுபாடுகள் எதுவும் இல்லாதவர்களாகக் குழுமி ஒரே மாதிரியான எஹ்ராம் வெள்ளுடையில் ஒரே இறைச் சிந்தனையுடன் ஒரே மொழியில் இறையருளை வேண்டி நிற்கும்போது உலக மக்கள் அனைவருமே ஆதி பிதாவான ஆதாமின் மக்கள் என்பதை உலகறிய பறைசாற்றும் ஒப்பற்ற காட்சியாக அமைகிறது. இறைவன் முன் எல்லோரும் ஓர் குலம், ஓர் இனம், ஓர் நிறை என்ற உன்னத நிலையை செயல் வடிவில் உலகுக்கு உணர்த்துவதாக உள்ளது. 40 லட்சத்து ஹாஜிகளும் வியக்கத்தக்க ஒற்றுமையுடனும், ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் ஹஜ்ஜை நிறைவேற்றுவதன் மூலம் உலக சகோதரத்துவத்தை, சமத்துவத்தை, ஆண்டு தோறும் ஹஜ் திருநாளின்போது நிலைநாட்டுகிறார்கள்.

தியாக சீலர் ஹஜ்ரத் இபுராஹீம் (அலை) அவர்களால். நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பு உலக மக்களுக்கு விடுவிக்கப்பட்ட ஹஜ் அழைப்பு, பதினைந்து நூற்றாண்டுகளாக பெருமானார் அவர்களால் முறைப்படுத்தப்பட்ட ஹஜ் கடமை, உலகமே வியக்கும் வகையில் அனைத்து வேறுபாடுகட்கும் அப்பாற்பட்ட நிலையில் உலக முஸ்லிம்களின் மாபெரும் மாநாடாகவே நடந்து வருகிறது.

> **உலகிலுள்ள பள்ளிவாசல்கள் அனைத்தின் அமைப்புக்கும் தன்மைக்கும் முற்றிலும் மாறுபட்டதாக கஃபா விளங்குகிறது. உலகெங்குமுள்ள பள்ளிவாசல்களில் இறை வணக்கம் புரிவோர் கஃபா இருக்கும் திசையை நோக்கியே தொழுவர்**

> **ஹஜ் பயணம் செய்வோர் கஃபாவிலிருந்து ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் இருந்தே தனது ஆடம்பர ஆடை அணிகலன் அனைத்தையும் களைந்துவிட்டு தைக்கப்படாத சாதாரண துணியிலான இரு வெள்ளைத் துண்டுகளை மட்டுமே அணிகிறார்கள்**

> **பதினைந்து நூற்றாண்டுகளாக பெருமானார் அவர்களால் முறைப்படுத்தப்பட்ட ஹஜ் கடமை, உலகமே வியக்கும் வகையில் அனைத்து வேறுபாடுகட்கும் அப்பாற்பட்ட நிலையில் உலக முஸ்லிம்களின் மாபெரும் மாநாடாகவே நடந்து வருகிறது**



அற்புதம் நிறைந்த சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின்

# வைகாசிப் பொங்கல் பெருவிழா

அ.அச்சுதன்



இந்து சமய வழிபாட்டு முறையில் கை மேல் பலன் கிடைக்கும் வழிபாட்டு முறையில் சக்கி வழிபாடு மிகவும் பிரசித்தி பெற்றது. இச் சக்கி வழிபாட்டில் அவரவர் செய்யும் கர்ம பலன்களுக்கு ஏற்ப தோசங்கள் ஏற்படும் போது அவற்றுக்கான பரிகாரங்களை செய்து வாழ்வில் நல்ல நிலையை அடையச் செய்யும் வழிபாட்டு முறையில் தற்காலத்தில் மேலோங்கி காணப்படுவது நாக தேவதைகளுக்கான வழிபாட்டு முறையாகும்.

அவ்வாறு தோச நிவர்த்தி மற்றும் வேண்டும் அடியவர்களுக்கு வரங்களை அள்ளி அள்ளிக் கொடுக்கும் மூதூர் கிழக்கின் கட்டைபறிச்சான் வடக்கில் அமைந்துள்ள சேனையூர் அருள்மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கள் பெரு விழா, நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் வைகாசித் திங்கள் 25ம் நாள் (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி 52 நிமிட சுபவேளையில் சேனையூர் ஸ்ரீ வருணகுலப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெறும் ஆரம்பப் பூசை நிகழ்வுடன் ஆரம்பமாகும்.

மடைப்பெட்டி, ஊர்வலம், காவடிகள், பூசைப்பெட்டிகள் சகிதம் சேனையூர் அருள் மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் சென்று அவ்விடமிருந்து தூக்கப்படும் காவடிகள் பூசைப்பெட்டிகளோடு பிரதான வீதியூடாக நாகம்மாள் வீதியை வந்தடைந்து முச் சந்தியில் வைக்கப்படும் முச்சந்தி மடையுடன் ஸ்ரீ நாகம்பாள் ஆலயத்தை சென்றடையும் ஆலய பிரதம அர்ச்சகர் பல்துறைக்கலைஞர் சிவஸ்ரீ அ.அரசரெத்தினம் அவர்களால் பக்தி பூர்வமாக மடைப்பெட்டி வாழந்துக்கள் கையேற்கப்பட்டுத் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

கிழக்கிலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பாரம் பரிய கலை, கலாச்சார, இலக்கிய சமய வரலாறுகள் வளர்ந்த மண் என வர்ணிக்கப்படும் மூதூர் கிழக்கின் கட்டைபறிச்சான் வடக்கு பகுதியில் இயற்கை எழில் கொஞ்சும் சேனையூர் எனும் புண்ணிய பதியிலே அருள் மிகு ஸ்ரீ நாகம்மாள் வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றார்.

உலகில் பல்வேறு நாடுகளிலுள்ள வழிபாட்டு முறைகளில் தாம் தரிசிக்கும் தெய்வத்தைக் கண் கூடாகக் கண்டு தரிசிக்கும் பாக்கியம் இந்த நாகதேவதை வழிபாட்டில் மட்டுமே காணப்படுவது இதன் சிறப்பாகும். சேனையூர் நாகம்மாள் ஆலயமானது 120 வருடத்திற்கு மேல் வரலாறு கொண்ட இவ் ஆலயம் வரலாற்றிலே 2 ஆண்டுகள் மட்டுமே எவ்வித பூசை நிகழ்வுகளும் நிகழாமல் இருந்துள்ளது. இதற்கு அப்பகுதியில் இடம் பெற்ற ‘கொடும் யுத்த சூழல்’ காரணமாகும் ஆனால் ஆலயத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை இதுவும் ஆலயத்தின் அற்புதம் என்கின்றார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமில்லாது கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலிருந்து வரும் சகல பக்த அடியார்களும் இந்த வைகாசிப் பொங்கல் திருவிழா காலத்தில் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களைச் செலுத்திச் செல்வது வழமை புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து கூட மக்கள் வந்து தமது உறவினர்களின் வீட்டில் தங்கி இத் திருவிழாவில் கலந்து கொள்வது வழக்கம்.

ஆகம ரீதியான பூசை முறைகள் எதுவுமின்றி சடங்கு முறையை மையமாகக் கொண்ட தனித்துவமான வழிபாட்டு முறையைக் கொண்ட இந்த ஆலயத்தின் பூசையானது பார்ப்பவர்களை மெய் சிலிர்க்க வைப்பதுடன், உண்மையான நம்பிக்கையையும், பக்கி பரவசத்தையும் ஏற்படுத்தும் வண்ணம் அமைந்திருக்கும்.

பல சகாப்தத்திற்கு மேல் பழமையும், அற்புதங்களும் இடம் பெற்று வரும் இந்த ஆலயத்திற்கு மேலும் பெருமை சேர்ப்பது ஆலயத்தின் மூலஸ்தானமாகும். சிறிய ஆசி வடிவிலான இவ் மூலஸ்தானம் இன்றும் அப்படியே இருக்கிறது. இதன் பின் புறம் ஒரு புற்றும் அதனைச் சுற்றி ஒரு வில் வளைவுடனான சுற்று மதிலும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த மதிலுக்குள் அமைந்துள்ள புற்று வாயிலாகவே ஆலய அர்ச்சகரால் ‘நாகம்மாளுக்கு பால், பழக்கரைசலை வைக்கப்படும். இப்பால், பழ பூசை காண வைகாசி பொங்கல் நாளில் அடியார்கள் முண்டியடித்துக் காண முயலுவார்கள். அருளுள்ளோர் கண்களுக்கு நாக தெய்வத்தின் அருட்காட்சி கிடைப்பதுண்டு. இந்த அருட்காட்சியில் காணும் நாக தேவதையின் தரிசனம் அருட்பேறு என்றால் அது மிகையாகாது.

சேனையூர் பதிக்கே வாருங்கள் - ஸ்ரீ
நாகம்மாளைப் போற்றுங்கள்
தேனாய் இனிக்கப் பாடுங்கள் - தேவி
தரிசனம் தருவாள் பாருங்கள்

என்ற பாடலின் மூலம் தேவியின் தரிசனத்தை சேனையூர் கவிக்குயிலன் அவர்கள் இவ்வாலயத்தின் மீது பாடிய பாடல் வரிகள் மூலம் கூறியுள்ளார். இவ் ஆலயத்தின் மூல மூர்த்தியாக நாக சிலையும் எழுந்தருளியாக அன்னை புவனேஸ்வரிக்கு ஐந்து தலை நாகம் குடை பிடித்தாற் போல் காட்சிதர அபயவரதம் காட்டி எழுந்தருளியுள்ளார். மேலும் இங்கு ஸ்ரீ வரசித்தி விநாயகர்,சூரிய நாராயணர், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பைரவமூர்த்தி, ஆகிய தெய்வங்கள் பரிவாரங்களாகவும், ஆலய உட்பிரவாகத்தில் சக்திவேல், ஸ்ரீ சந்தான கோபால் சுவாமியும் வழிபடப்படுகின்ற தேவதைகளாகக் காட்சி தருகின்றனர்.

ஆலய அர்ச்சகர் மஞ்சள் நிறத்துணியினால் வாய், மூக்கு காதுகளைக் கட்டிக் கொண்டே நாகதேவிக்குரிய சகல பூசை வழிபாடுகளையும் செய்து வருகின்றார். சர்ப்பம் தீண்டியவர்களுக்கு, விசக்கடி சம்பந்தமான நோயாளர்களுக்கும், புத்திர பாக்கியமற்றோர், திருமணதடையுடையோர் ஆகிய தோஷமுள்ளோர்களுக்குப் பரிகாரங்கள் அர்ச்சகரால் மேற்கொள்ளப்படும்.

தாம் அன்னையிடம் வேண்டி நேர்த்திக்கடன் வைக்கும் அடியார்கள் தமது வேண்டுதல் நிறைவேறிய பின் அந்த நேர்த்திக் கடனை செலுத்துவதற்காக இத் திருவிழா காலத்தில் பெருந்தொகையானவர்கள் ஆலயத்தை நாடி வருவதை அவதானிக்கலாம்.

திருவிழாக் காலங்களை விட ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயத்தில் விசேடமான பூசைகள் இடம்பெறும். இவ்வாலயத்தில் கட்டப்படும் மஞ்சள்நிற வேளை நூலுக்கு மிகவும் மகத்துவமான சக்தியுள்ளது என அடியார்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான அற்புதங்கள் நிறைந்த சேனையூர் அருள்மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடத்திற்கு ஒரு நாள் இடம் பெறும் வைகாசிப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான நாகம்மாளின் அருளாசியைப் பெற்றுக் கொள்ளுமாறு பக்தர்களை அன்போடு அழைக்கின்றனர் ஆலய அறங்காவல் சபையினர்.

மேற்படி, விழாவன்று கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வும், சைவ நற்சிந்தனையும் இடம்பெறுகின்றமையும்; மதிய வேளை அன்னதானமும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

பாலை குருந்தையும், பாங்குடன் ஆலையும்
பக்கமெல்லாம் மரச்சோலைகளும்
கூடியே வீதியைக் கூடாரம் போற்சுற்றி
கூட்டமாய் நிற்பதைக்காண நீவீர்
சேனையூர்ப் பதிக்கே வாருங்கள் நாக
தேவி தரிசனம் தருவாள் பாருங்கள்
என்ற பாடல் மிகவும் அற்புதம் நிறைந்தது.



கனகராசா திலக்ஷனா,
மூன்றாம் வருடம்,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# பெண் வேட்பாளர்கள் எதிர்நோக்கிய சவால்கள்

இலங்கையின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சமீபத்தில் நிறைவடைந்தது. மக்கள் பெருமளவில் பங்கேற்று தங்கள் ஜனநாயக உரிமையை நிலைநாட்டியமை மிகக் காணத்தக்கதொரு நிகழ்வாகும். ஆனால், தேர்தல் முடிந்ததன் பின் எதை நாம் எதிர்பார்க்க வேண்டும்? வெற்றியடைந்த உறுப்பினர்கள் என்ன செய்ய வேண்டும்? மக்களின் பங்கு இப்போது என்ன? பெண் வேட்பாளர்கள் எதிர்நோக்கிய சவால்கள் என்ன? இதுதான் இக்கட்டுரையின் மையக் கேள்வி.

ஜனநாயகம் என்பது மக்கள் ஆட்சி என்று அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்படும் ஒரு அரசியல் அமைப்பு. அதில், உள்ளூராட்சி அமைப்புகள் அதன் அடித்தளமாகக் கருதப்படுகின்றன. கிராம, நகர நிர்வாகங்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் இந்த அமைப்புகள், அவர்களின் அன்றாட தேவைகளுக்குத் தீர்வு காணும் திறனுடையவை. எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது வெறும் ஒரு முற்போக்கு நடவடிக்கையாக அல்ல; அது மக்கள் ஆட்சியின் உயிரோட்டமாக விளங்குகிறது.

தேர்தலை நோக்கிச் செல்லும் காலம், அரசியல் சூழ்நிலையின் விசாரணைக் காலமாக அமைகிறது. வேட்பாளர்கள் தங்களது வாக்குறுதிகளைக் கொண்டு மக்களிடம் நம்பிக்கையைப் பெற முயல்கின்றனர். இதே நேரத்தில், வாக்காளர்களின் விழிப்புணர்வும் இக்காலத்தில் மிக முக்கியம். ஒரு வாக்கு என்பது எதிர்கால சமூகத்தின் உருவமைப்பை தீர்மானிக்கக்கூடிய ஒரு வலுவான கருவி. ஊடகங்கள், குடிமக்கள் அமைப்புகள், சமூக ஊடகங்கள் என பல்வேறு அமைப்புகள் இந்த விழிப்புணர்வைத் தூண்டும் பணியில் ஈடுபட வேண்டும்.

ஒரு திகதியிலே மக்கள் வரிசையாக நின்று, தங்கள் விருப்பத்தை வாக்குப் பெட்டியில் இடும் அந்தத் தருணம் - ஜனநாயகத்தின் சோதனைத் தருணமாகும். வாக்குப்பதிவின் ஒழுங்கு, பாதுகாப்பு மற்றும் சரியான கண்காணிப்பு ஆகியவை தேர்தலின் நம்பகத்தன்மையை நிரூபிக்கின்றன. வன்முறை, ஊழல், வாக்களிப்பின் கட்டாயம் போன்ற விடயங்கள் இல்லாமல், சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடக்க வேண்டும் என்பது அனைவரதும் பொதுவான எதிர்பார்ப்பு.

தேர்தல் முடிந்து, வெற்றியடைந்தவர்கள் பதவியேற்கும் தருணம் புதிய பொறுப்புகளை ஆரம்பிக்கும் நேரமாகும். அவர்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நினைவில் கொண்டு, திட்டமிட்டு செயல்பட வேண்டும். மக்கள் நலனுக்கான திட்டங்கள், திறந்த நிர்வாகம், ஒழுங்கு மற்றும் பொறுப்புணர்வு - இவை எல்லாம் அவர்களது நடைமுறையால் சாத்தியமாக வேண்டும். தோல்வியடைந்த வேட்பாளர்களும் ஜனநாயகத்திற்குப் பணிவுடன் ஒத்துழைத்து, நல்லாட்சிக்கான தங்களது பங்களிப்பைத் தொடர வேண்டும்.

இவ்விடத்தில் மேலும் ஒரு கவனிக்க வேண்டிய முக்கியமான ஒரு விடயம் இருக்கிறது அதாவது அரசியலில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்.

பெண்களுக்கான அரசியல் வாய்ப்புகள், அவர்களது நீண்ட போராட்டங்கள் மற்றும் சமூக ஆக்கப்பணிகளின் தொடர்ச்சியாகவே உருவானவை. ஆனால், அரசியல் துறையில் பெண்கள் இன்று கூட எதிர்கொள்வது கடினமான ஓர் போராட்டம். பாரம்பரியமாக ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் இத்துறையில், பெண்கள் தங்கள் இடத்தை நிலைநாட்டுவதற்காக இன்னும் எதிர்ப்புகளோடு போராட வேண்டிய சூழ்நிலை தொடர்கிறது.

வவுனியா உள்ளிட்ட வடக்கு கிழக்கு மாவட்டங்களில், கடந்த தேர்தல்களில் பல பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். ஆனால் அவர்கள் எதிர்கொண்ட அவதூறு, சமூகக் கட்டுப்பாடுகள், மற்றும் கட்சி அரசியலில் உள்ள பாரபட்சம், மிகக் கடினமான நிலைகளைக் கொண்டு வந்தது. பிரசாரங்களின் போது, அரசியல் வாதங்கள் மீது விமர்சனம் செய்வதைத் தாண்டி, பல்வேறு தனிப்பட்ட வாழ்க்கை விவரங்களை தகராறு செய்யும் வகையில் அவதூறுகள் பரப்பி விடப்பட்டன. இது சமூக ஊடகங்களிலும், பொதுச் சந்தைகளிலும் தொடர்ச்சியாகப் பகிரப்பட்டது.

“ஆண்களுக்கு இவ்வுலகில் ஆயிரம் சவால்கள் இருந்தால், பெண்களுக்கு ஆயிரத்துடன் சேர்த்து இன்னொரு சவாலும் உண்டு. அது, ஆண்கள் என்கிற மிக முக்கியமான பெரிய சவால். இந்த நிலையில் பெண் வேட்பாளராக நாம் களம் இறங்கும் போது முதலில் உள்ள சவால் ஆண்கள் தான். இவ்வாறான நிலையில் தற்துணிவு வேண்டும். அத்துடன், எதையும் சமாளிக்கக் கூடிய மன வலிமை வேண்டும். நாம் பெண்களாகக் களம் இறங்கும் பொது இவர்கள் வெல்வார்களா. வென்று என்ன செய்வார்கள் என்ற ஏளன மனநிலை தோன்றும். பெண்களது கருத்துக்கு மதிப்பளிக்காத நிலைமை ஏற்படும். இரண்டாம் தரப்பாகவே பெண்களை நோக்குவர். இருந்த போதிலும், பிரதேச மக்களுடன் சுமுகமான உறவைப் பேணவேண்டும். பிரச்சினைகள் என்று வரும் போது, அதுவும் பெண்கள் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டு அவர்கள் பிரச்சினைக்கான தீர்வுக்கு வழிகாட்டுதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். முற்று முழுதும் குறிப்பிட்ட கிராமத்துடன் ஒன்றித்து வாழ வேண்டும். ஆனாலும் அரசியலில் பெண்கள் பங்களிக்கும் போது, இதுக்கு ஏன் வேண்டாத வேலை என்ற மனநிலைமைதான் முதலில் எல்லோரிடமும் தோன்றும். இது ஒரு தேவையற்ற விடயம் என்றும் வீட்டில் இருக்க வேண்டியவர்களுக்கு அரசியலில் என்ன வேலை என்பதும் அடுப்படிகள் அரசியலுக்கு எதற்கு என்றும் பலதரப்பட்ட கருத்துகள் நிலவுகிறது. ஒட்டுமொத்தத்தில் பெண்கள் அரசியலுக்கு வந்து எதையும் சாதிக்கப் போவதில்லை என்ற ஒரு கருத்துதான் நிலவுகிறது. ஆனாலும் இளம் பெண்கள் கண்டிப்பாக அரசியலில் இறங்க வேண்டும். எமக்கானதை, எமது சமூகத்திக்கானதை எம்மால் முடிந்தவரைப் பெற்றுக் கொடுக்க நாம் முன்வர வேண்டும். நாமும் அரசியல் நிலைவரங்களை அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். எம்மாலும் சாதிக்க முடியும் என்று காட்ட வேண்டும். தற்போது அனைத்துத் துறைகளிலும் பெண்கள் விருட்சமாகி நிற்கின்றனர். இந்தப் பெண்களால் ஏன் அரசியலில் விருட்சமாக முடியாது. முடியாது என்ற மனப்பாங்கை வளர்த்து வைத்துள்ளார்கள். அந்த மூடக் கொள்கையைத் தகர்த்து அரசியலிலும் பெண்கள் தம் பங்கைப் பெற்று திறம்படச் செயற்பட வேண்டும். அரசியல் என்றால் அது ஆண்களுக்கு உரியது என்று பேசப்படும் விடயத்தை உடைத்தெறிந்து பெண்கள் அரசியலில் காலூன்றவேண்டும்" என்கிறார் யாழ். மாநகர் உறுப்பினராகத் தெரிவாகியுள்ள திருமதி. சரஸ்வதி சுகிர்தராஜ்

பல பெண்கள் கட்சி அமைப்புகளின் உள்நடப்பில் முக்கியப் பதவிகளுக்குச் செல்வதில் இன்னும் பின்தங்கியுள்ளனர். சிலருக்கு வேட்பு மனுவை மட்டும் தருவது சவாலானதாக இருக்கிறது. ஆனால், இதற்கெல்லாம் எதிராக அவர்கள் எதிர்கால தலைமுறைக்கான வழிகாட்டிகளாகத் திகழும் வகையில் தொடர்ந்து தங்களை முன்னிறுத்துகின்றனர்.

பெண்களுக்கெதிரான வெறுப்புப் பேச்சுகள் அவர்களின் அரசியல் முன்னேற்றத்தை உடைக்கும் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, தேர்தல் காலங்களில் சக பெண்வேட்பாளரின் தன்னம்பிக்கையை உடைக்கவும், வாக்காளர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தவும் அவதூறுப் பேச்சுகள் காரணமாகின்றன. இந்த நிலை மாற்றத்துக்கு உட்படாதவரைப் பெண்களின் அதிகரித்த அரசியல் பிரதிநிதித்துவம் கேள்விக்குறியாகவே காணப்படும். இருந்தாலும், அவர்கள் விட்டுவிடாமல் போராடுகிறார்கள். இவர்களின் போராட்டத்திற்கு வாக்காளர்களின் விழிப்புணர்வும் துணையாக இருக்க வேண்டும்.

“பெண் வேட்பாளராக அரசியல் பயணத்தில் அனுபவித்த முக்கியமான சவால் பெண் வேட்பாளர் என்றாலே சவால் தான் அரசியலுக்குள் சென்றாலும் சரியான முறையில் அங்கீகாரம் கிடைப்பதில்லை, சமூக மட்டத்தில் ஒரு சிலரின் எதிர்மறையான கருத்துக்கள், எதிர்க்கட்சி வேட்பாளர்கள் தேவையற்ற பொய் வதந்திகள் பரப்புதல், பாதுகாப்பு இல்லை, அதுமட்டுமின்றி சமூக ஊடகங்களில் பிழையாக எழுதுதல் இதனால் சமூக ஊடகங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டேன், முன்பள்ளி இணைப்பாளர் என்ற ரீதியில் சமூகத்தில் 16 வருடம் சேவை செய்த நான் பெண்கள் மத்தியிலும் சமூக மட்டத்திலும் நம்பிக்கை ஏற்படுத்துவது பெரிய சவாலாக இருக்கவில்லை சமூக மட்டத்தில் இப்போது தான் ஒரு முன்மாதிரியாக இருக்கின்றேன், இப்பொழுது அநேக பெண்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்து வெளியே வருகின்றார்கள் முன்னைய காலங்களில் அதாவது 2018 ஆண்டு பெண்களிடம் ஆசனம் கொடுக்கவே சங்கடப்பட்டவர்கள் இந்த வருடம் அதிக பெண்களுக்கு வழங்கியுள்ளார்கள். அத்தருணங்களில் முன்மாதிரியாகப் பலருக்குத் தான் இருந்தேன். தேர்தல் காலத்தில் தனக்கு பாலியல் ரீதியான தொந்தரவுகளும் இருந்தது, அதாவது சமூக ஊடகங்களின் ஊடாக பல தவறான குறுஞ்செய்திகள் மற்றும் பல தேவையற்ற புகைப்படங்கள், காணொளிகள் அனுப்பினார்கள், கட்சி சார்ந்தவர்களுடன் உல்லாசத்தை அனுபவிப்பது என்றவரான பல்வேறு வெறுப்பு பேச்சுக்களை சமூக ஊடகத்தின் ஊடாக தனக்கு அனுப்பினார். இளம் பெண் அரசியல்வாதி என்ற ரீதியில் தான் ஏனைய பெண்களுக்கு சொல்ல விரும்புவது முதலில் எங்களை நாங்கள் நம்ப வேண்டும், நாங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் இருந்தால் ஏனையவற்றிற்கு அஞ்ச தேவை இல்லை எடுக்கும் முயற்சிகள் உறுதியாகவும் நம்பிக்கையுடனும் இருந்தால் நிச்சயம் வெற்றி பெறலாம்” என்று காரைநகர் பிரதேச சபை தேர்தலில் போட்டியிட்ட கிளியோபட்ரா தனது கருத்தைத் தெரிவித்தார்.

வாக்காளர்களின் பங்கு ஓட்டுப் போட்டதும் முடிவடையாது. அவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களை கண்காணித்து, பிழைகள் இருப்பின் அவற்றை விமர்சித்து, தேவையான இடங்களில் தங்களது கோரிக்கைகளை முன்வைக்கவேண்டும். கிராம சபைகள், பொது கலந்தாய்வுகள், சமூக ஊடகங்கள் இவையனைத்தும் கருத்துக்களைப் பகிரும் வாயில்களாக இருக்கின்றன.

பொதுமக்கள் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களில் நேரடி பங்கேற்பும் வழங்கப்பட வேண்டும். மக்கள் இந்த வாயில்களைக் கொண்டு அவர்களது பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்பதற்கான நம்பிக்கையை உருவாக்க வேண்டும்.

பெண்கள் தலைமைத்துவ பொறுப்பினை ஏற்கின்றபோது, அவர்கள் மீது சமூக எதிர்பார்ப்பு பலமடங்காக இருக்கும். “அவர் குடும்ப பெண்” என்ற பாரம்பரிய நிழலில், அவர்களின் நிர்வாகத் திறனும், சமூகப் பங்களிப்பும் மதிப்பளிக்கப்படாமல் போகும் நிலை உருவாகிறது. இது போன்ற நிலைமைகளை மக்கள் எதிர்த்து, பெண்களுக்கு ஆதரவு தரும்போது மட்டுமே, அவர்கள் வெளிப்படையாக மக்களுக்காக செயல்பட முடியும். வவுனியா உள்ளிட்ட வடக்கு கிழக்கு மாவட்டங்களில், சில பெண்கள் தங்கள் சமூகங்களுக்குள் இருந்து தைரியமாக எழுந்து வந்து, மாற்றத்திற்கான குரலாக செயல்படுகிறார்கள்.

---



# உணவுக்கான உரிமை ஓர் அடிப்படை மனித உரிமை

## ஜூன் 7ஆம் திகதி உலக உணவுப் பாதுகாப்பு தினமாகும்

பாதுகாப்பான உணவு நடைமுறைகளின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பாதுகாப்பான உணவுக்கான உலகளாவிய தேவையை எடுத்துக்காட்டவும் ஆண்டுதோறும் உலக உணவுப் பாதுகாப்பு தினம் (World Food Safety Day) அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த சர்வதேச தினம் உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு முயற்சியாகும்.

ஒரு நாட்டில் உணவுப் பாதுகாப்பைப் பராமரிக்க நான்கு ஒன்றோடொன்று தொடர்புடைய கூறுகள் கடைபிடிக்கப்பட வேண்டும். அதாவது,

1. பற்றாக்குறை இல்லாமல் நாடு முழுவதும் எல்லா நேரங்களிலும் போதுமான உணவுப் பொருள் இருப்புகளைப் பராமரித்தல்
2. அனைத்து வகையான உணவுகளையும் பொதுமக்களால் வாங்கக்கூடிய வகையில் விலைகளைப் பராமரித்தல்
3. ஒரு வீட்டில் உள்ள அனைவரின் ஊட்டச்சத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் வகையில் உணவைப் பெறும் திறனைப் பராமரித்தல்
4. தொடர்ச்சியான மற்றும் நிலையான உணவு விநியோகச் சங்கிலியைப் பராமரித்தல்

போதுமான உணவு இருப்புகளைப் பராமரிப்பதில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் தற்போதைய இருப்பு நிலைமைக்கு கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம். கடந்த காலத்தில் எவ்வளவு உணவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது? எவ்வளவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது? நுகர்வு முறையின்படி இப்போது எவ்வளவு கிடைக்கும்? அது எவ்வளவு காலத்திற்கு போதுமானது? அந்த உணவு எங்கே சேமிக்கப்படுகிறது? இது போன்ற அனைத்து தகவல்களும் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும்.

இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் பற்றிய தகவல்களும் பராமரிக்கப்பட வேண்டும். மேலும், எதிர்காலத்தில் எவ்வளவு உற்பத்தி செய்யப்படும்? இறக்குமதி மூலம் எப்போது இறக்குமதி செய்வது போதுமானதா இல்லையா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இல்லையெனில், இயற்கை பேரழிவு ஏற்படும் போது அதிக விலையில் அவசர கொள்முதல்கள் செய்யப்பட வேண்டும், இது நாட்டிற்கு மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்தும்.

போதுமான உணவு இருப்புக்களைப் பராமரிப்பது மட்டும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யாது. நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பொருளாதார ரீதியாக உணவை வாங்கும் வகையில் உணவு விலைகள் பராமரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வீடு, குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் தினசரி கூலி பெறுபவர்கள் போன்றவர்களால் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்கக்கூடிய வகையில் நாட்டில் உணவு விலைகள் பராமரிக்கப்பட வேண்டும்.

வாங்க முடியாதவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் மூலம் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். நாட்டின் ஒவ்வொரு பிரிவினரும் அவர்கள் விரும்பும் அளவுக்குத் தேவையான உணவைப் பெற முடியாவிட்டால், அத்தகைய நாட்டில் உணவுப் பாதுகாப்பு இல்லை.

உணவுப் பாதுகாப்பின் மற்றொரு முக்கியமான அம்சம், குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் வயது, பாலினம், நோய், கர்ப்பம், உடல் செயல்பாடு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, அவர்களின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உணவைப் பெறும் திறன் ஆகும். இல்லையெனில், பெரும்பாலான குடும்பங்களும் நாடும் தவிர்க்க முடியாமல் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான நோய்களால் பாதிக்கப்படும். குடும்பத்தில் உள்ள குழந்தைகள் உணவின் மூலம் சரியான ஊட்டச்சத்து பெறவில்லை என்றால், அவர்களின் உடல் மற்றும் மன வளர்ச்சி பாதிக்கப்படும், மேலும் பார்வை இழப்பு ஏற்படலாம், இதனால் அந்த தலைமுறை சமூகத்திற்கு பொருளாதார ரீதியாக பயனற்றதாகிவிடும்.

சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கையின்படி, உணவுக்கான உரிமை ஓர் அடிப்படை மனித உரிமை. மேலும், எந்தவொரு நாடும் அல்லது மக்கள் குழுவும் பசியை ஏற்படுத்தும் வகையில் செயல்படக்கூடாது, மேலும் போரின் தந்திரோபாயமாக உணவு விநியோகத்தை சீர்குலைப்பது சர்வதேச சட்டத்தின் கீழ் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பின் முக்கியத்துவம் காரணமாக, அனைத்து நாடுகளின் ஒப்பந்தத்துடன் 2015 இல் ஐக்கிய நாடுகள் சபையால் முன்மொழியப்பட்ட 17 நிலையான வளர்ச்சி இலக்குகளின் இரண்டாவது குறிக்கோள் "2030 ஆம் ஆண்டுக்குள், பசியை முடிவுக்குக் கொண்டுவருதல், உணவுப் பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்தை மேம்படுத்துதல் மற்றும் அனைத்து நாடுகளிலும் நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல்" என்பதாகும். இந்த இலக்கை அடைவதற்கு கொவிட் தொற்றுநோய் ஒரு பெரிய தடையாக மாறியுள்ளது. அதன் குடிமக்களின் உணவுப் பாதுகாப்பைப் பாதுகாப்பதன் மூலம் உணவுக்கான உரிமையை நிறைவேற்றுவது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாகும். உணவுப் பாதுகாப்பின் அடிப்படை கூறுகளில் ஏதேனும் இடையூறு அல்லது முறிவு உணவுப் பாதுகாப்பின்மைக்கு வழிவகுக்கிறது. கொவிட் -19 தொற்றுநோய்க்கு முன்பிருந்தே உலகில் ஏராளமான மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர்,

உலகில் சுமார் 800 மில்லியன் மக்கள் ஏற்கனவே தினசரி போதுமான உணவின்றி அவதிப்படுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் வறுமை. அவர்களின் அன்றாட வருமானம் 1.90 அமெரிக்க டொலர்களுக்கும் குறைவாக உள்ளது. வறுமையே அவர்களின் உணவுப் பாதுகாப்பின்மைக்கு மூல காரணம். வறுமையில் வாடும் பலருக்கு சொந்தமாகத் தங்குமிடம் அல்லது நிலம் இல்லை. அவர்களால் உணவு வாங்கவோ அல்லது உற்பத்தி செய்யவோ முடியாது. பசி ஓர் அன்றாட பழக்கமாகிவிட்டது. சரியான உணவு இல்லாததால் ஊட்டச்சத்துக் குறைபாடு ஒரு மரபு.

ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின்படி, கொவிட் -19 தொற்றுநோய் உலகளாவிய உணவுப் பாதுகாப்பின் விநியோகம் மற்றும் தேவை ஆகிய இரண்டையும் சீர்குலைத்துள்ளது. இது முழு உணவு அமைப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பிலும் பேரழிவு தரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. விதைகள் மற்றும் பிற உள்ளீடுகளைக் கொள்முதல் செய்வதிலிருந்து நுகர்வோர் வரை உணவுச் சங்கிலி முற்றிலும் சீர்குலைந்துள்ளது. உள்ளூர் பயணக் கட்டுப்பாடுகள் தொழிலாளர் விநியோகத்தை பலவீனப்படுத்தியுள்ளன. தினசரி ஊதியம் பெறுபவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு இல்லாதது தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் உணவுப் பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

கொவிட் -19 தொற்றுநோய் இன்னும் கட்டுப்பாடில்லாமல் உலகம் முழுவதும் பரவி வருகிறது. கொவிட் -19 தொற்றுநோயால் சுமார் 200 மில்லியன் மக்கள் வேலை இழக்க நேரிடும் என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்திருந்தது.. தொற்றுநோயால் விதிக்கப்பட்ட இயக்கக் கட்டுப்பாடுகள் தினசரி மற்றும் பிற சேவைகளில் உள்ள அனைத்து தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் முற்றிலுமாக சீர்குலைத்துள்ளன.

இது இந்த ஆண்டு உலகளாவிய பொருளாதார வளர்ச்சியை 5 சதவீதம் குறைக்கக்கூடும் என்று உலக வங்கி கணித்துள்ளது. வாழ்வாதார இழப்பு இந்த குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பில் பேரழிவு தரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இருப்பினும், இது அனைத்து நாடுகளுக்கும் விகிதாசாரமாக இல்லாததால், குறைந்த வருமான நாடுகளில் உள்ள மக்களின் உணவுப் பாதுகாப்பில் இது மிகவும் ஆபத்தான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். மேலும், பொருளாதார வளர்ச்சி மேலும் குறைந்தால், உலகளாவிய பொருளாதார மந்தநிலை ஏற்படலாம், இது பல நாடுகள் அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்.

### உலக உணவுப் பாதுகாப்பு தினம்:

உலக உணவுப் பாதுகாப்பு தினம் 2018ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஒரு தீர்மானத்தின் மூலம் கொண்டுவரப்பட்டது. நெதர்லாந்து இராச்சியத்தால் முன்மொழியப்பட்ட இந்த தீர்மானத்திற்கு மொத்தம் 44 நாடுகள் ஆதரவு வழங்கின. இந்த நாள் ஆண்டுதோறும் ஜூன் 7ஆம் திகதி அனுசரிக்கப்படும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

உலக உணவுப் பாதுகாப்பு தினம் நிறுவப்பட்டிருப்பது, உணவுப் பாதுகாப்பு குறித்து அதிகரித்து வரும் உலகளாவிய கவலையையும், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கூட்டு நடவடிக்கையின் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகிறது. பாதுகாப்பான உணவு நடைமுறைகளை உறுதி செய்வது பொது ஆரோக்கியத்திற்கு மட்டுமல்ல, நிலையான வளர்ச்சி, உணவு பாதுகாப்பு மற்றும் சர்வதேச வணிகத்திற்கும் முக்கியமானது என்பதை இது அங்கீகரிக்கிறது.

### முக்கியத்துவம்:

உலக உணவுப் பாதுகாப்பு தினத்தின் முக்கிய நோக்கம் உணவு மூலம் பரவும் நோய்களைத் தடுப்பது, அதனை கண்டறிவது மற்றும் நிர்வகிப்பதை ஊக்குவிப்பதாகும். நோயைத் தடுப்பதற்கும் உலகெங்கிலும் உள்ள தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும் பாதுகாப்பான உணவினை கையாளுதல், சேமிப்பு மற்றும் தயாரிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.


உலக உணவுப் பாதுகாப்பு தினம் அனுசரிக்கப்படுவது உலகளவில் மேம்பட்ட உணவுப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கான விழிப்புணர்வு, அறிவு பகிர்வு மற்றும் வாதிடுதல் ஆகியவற்றிற்கு பங்களித்துள்ளது.

கொண்டாட்டம்

உலக உணவுப் பாதுகாப்பு தினத்தன்று, தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களிடையே கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்த உலகளவில் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளில் கருத்தரங்குகள், பட்டறைகள், மாநாடுகள், பொது விழிப்புணர்வு பிரசாரங்கள் மற்றும் பாதுகாப்பான உணவு நடைமுறைகள் குறித்த பயிற்சி அமர்வுகள் ஆகியவை அடங்கும். உணவு விநியோகச் சங்கிலியின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சிறந்த நடைமுறைகள் மற்றும் புதுமையான தீர்வுகளைப் பகிர்ந்து கொள்ள அரசாங்கங்கள், உணவுத் தொழில் செய்பவர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் ஒத்துழைக்கின்றனர்.

அமெரிக்கா

## “இந்தியாவை சமாதானப்படுத்த ட்ரம்ப் உதவ வேண்டும்’



பயங்கரவாத பிரச்சினையில் உலகளவில் பாகிஸ்தானை தனிமைப்படுத்தும் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்தியாவுடன் சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உதவ வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் நடந்த ஒரு நிகழ்வில் உரையாற்றிய பாகிஸ்தான் பிரதமர், அணு ஆயுதம் ஏந்திய அண்டை நாடுகளுக்கு இடையேயான உரையாடலை ஊக்குவிப்பதில் அமெரிக்கா மிகவும் தீவிரமான பங்கை வகிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.


இரு நாடுகளுக்கும் இடையிலான விரோதப் போக்கை நிறுத்துவதற்கு உதவியதற்காக ட்ரம்ப் “புகழ் பெறத் தகுதியானவர்” என்று முன்னாள் வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரி கூறியதை பாகிஸ்தான் பிரதமர் எதிரொலித்துள்ளார்.

பங்களாதேஷ்

## பறிபோனது ஷேக் முஜிபுர் ரஹ்மானின் பட்டம்

முகமது யூனுஸ் தலைமையிலான பங்களாதேஷ் அரசு, ஷேக் முஜிபுர் ரஹ்மானின் ‘தேசத்தந்தை’ என்ற பட்டத்தைத் திரும்பப் பெற்றுள்ளது.

சமீபத்தில் புதிதாக அச்சிடப்பட்ட ரூபாய் நோட்டுகளில் இருந்து முஜிபுர் ரஹ்மானின் உருவப்படம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, இடைக்கால அரசாங்கம் ‘தேசிய சுதந்திரப் போராட்ட கவுன்சில் சட்டத்தில்’ திருத்தம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.



பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் ஒரு சுதந்திர நாடாக உருவாவதற்குக் காரணமான விடுதலைப் போராட்டம், ஷேக் முஜிபுர் ரஹ்மானின் அழைப்பின் பேரில் நடத்தப்பட்டது.இது ஒரு தனி நாட்டை உருவாக்க வழிவகுத்தது.

விடுதலை காலத்தில் வங்கதேச அரசாங்கத்தில் இருந்தவர்கள், சுதந்திரப் போராளிகள் என்று அழைக்கப்பட்டவர்கள் தற்போது இடைக்கால அரசால், ‘விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்பாளர்கள்’ ஆக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், முஜிபுர் ரஹ்மானின் தேசத்தந்தை பட்டம் நீக்கப்பட்டாலும், அவரின் சுதந்திரப் போராட்ட வீரர் அந்தஸ்து தக்கவைக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ்

## மேக்ரானின் மெழுகு சிலை திருட்டு

கிரெவின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரானின் மெழுகு சிலை திருடப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனிடையே, ரஷ்யாவுடன் பிரான்ஸ் பொருளாதார உறவைக் கண்டித்து கிரீன்பீல் என்ற அமைப்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். மேலும், ரஷ்யாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை முழுமையாகத் துண்டிக்காத பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மேக்ரானுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, கிரெவின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரானின் மெழுகு சிலையைப் போராட்டக்காரர்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

இதன் மதிப்பு ரூ.40 இலட்சமாகும். இது குறித்து தகவல் அறிந்து சென்ற பொலிஸார், சிலையை மீட்டு மீண்டும் அருங்காட்சியகத்திடம் ஒப்படைத்தனர்.



இந்தோனேசியா

## காதல் ஜோடிக்கு 100 சவுக்கடி

இந்தோனேசியாவில், திருமணம் கடந்த உறவில் ஈடுபட்ட குற்றச்சாட்டிற்காக ஒரு காதல் ஜோடிக்குப் பொதுவெளியில் 100 சவுக்கடி தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில், கடந்த 2022ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சட்டத்திருத்தத்தின்படி, திருமணம் கடந்த உறவு வைத்துக் கொள்வது தடை செய்யப்பட்டது. குறிப்பாக இந்தோனேசியாவின் ஆசே மாகாணத்தில், இஸ்லாமிய ஷரியா சட்டத்தின்படி திருமணமாகாத ஜோடி பாலியல் உறவு கொள்வது சட்டவிரோதமாகும்.

இந்த நிலையில், திருமணம் கடந்த உறவில் ஈடுபட்ட குற்றச்சாட்டிற்காகப் பண்டா ஆசே நகரில் ஒரு காதல் ஜோடிக்கு பொதுவெளியில் 100 சவுக்கடி தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர சூதாட்டம், மது அருந்துதல் உள்ளிட்ட குற்றங்களுக்காக மேலும் 3 பேருக்கு மொத்தம் 49 சவுக்கடிகள் தண்டனையாக வழங்கப்பட்டது.

தண்டனை வழங்கப்படும் சமயத்தில் மருத்துவ உதவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. சவுக்கடி தண்டனை வழங்குவதன் மூலம் குற்றம் இழைத்தவர்கள் தங்கள் தவறை உணர்ந்து திருந்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படுவதாக, பண்டா ஆரே நகர மேயர் இலிசா ஜமால் தெரிவித்துள்ளார்.



அதே சமயம், இந்தோனேசியாவில் உள்ள மனித உரிமை அமைப்புகள் இந்த தண்டனையைக் கடுமையாக விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா

## டிக்கெட் முன்பதிவுகளில் மோசடி: 2.9 இலட்சம் போலி கணக்குகள் அம்பலமானது

பொது மற்றும் தத்கல் டிக்கெட் முன்பதிவுகளில் 2.9 இலட்சம் சந்தேகத்துக்கிடமான பிஎன்ஆர்.களை (பயணிகள் விவரம்) இந்திய ரயில்வே திணைக்களம் கண்டுபிடித்துள்ளது.

நாடு முழுவதும் ரயில்களில் பயணம் செய்வதற்கு, ஐஆர்சிடிசி இணையதளத்தின் மூலம் பயணிகள் டிக்கெட் முன்பதிவு செய்கின்றனர்.

எனினும், ஒவ்வொரு ரயிலுக்கும் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களில் மொத்த டிக்கெட்டுகளும் விற்றுவிடுகின்றன. இதனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தனர். குறிப்பாக பண்டிகைகள், விடுமுறை நாட்களில் பயணம் செய்வதற்கான டிக்கெட்டுகள் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களில் தீர்ந்துவிடும். இத்தனைக்கும் பண்டிகைக்காக 60 நாட்களுக்கு முன்பே முன்பதிவு தொடங்கும். அப்போதும் கூட டிக்கெட்டுகள் மளமளவென விற்று விடும். இதுகுறித்து நிறைய புகார்கள் ரயில்வேக்கு வந்த வண்ணம் இருந்தன.

போலி ஐ.டி. இதையடுத்து, ரயில்வே நிர்வாகம் முன்பதிவு டிக்கெட்டுகள் குறித்து தீவிர ஆய்வு நடத்தியது. அப்போது போலி பயனர் அடையாள எண்களை (யூசர் ஐ.டி.) பயன்படுத்தி ஏராளமான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து வந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து மே மாதம் வரையிலான 5 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பொது மற்றும் தத்கல் டிக்கெட் முன்பதிவுகளில் 2.9 இலட்சம் சந்தேகத்துக்கிடமான பிஎன்ஆர்.களை



(பயணிகள் விவரம்) ரயில்வே அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

இதுகுறித்து ரயில்வே உயரதிகாரிகள் கூறியதாவது:

“ ஐஆர்சிடிசி இணையதளத்தில் போலி ஐ.டி.க்களை உருவாக்கி டிக்கெட் முன்பதிவு செய்வது கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பிறகு கடந்த ஜனவரி முதல் மே வரையில் 2.5 கோடி ஐ.டி.க்கள் முடக்கப்பட்டன. மேலும், 20 லட்சம் ஐ.டி.க்களை ஆய்வு செய்து வருகிறோம்.

“இதுதொடர்பாக இதுவரை 134 புகார்கள், தேசிய சைபர் கிரைம் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 6,800 மின்னஞ்சல் முகவரிகள் முடக்கப்பட்டுள்ளன” என்றனர்.



## தேசங்களுக்கான லீக் தொடர்: ரொனால்டோவின் கோலுடன் ஜேர்மனியை வென்று அரையிறுதியில் போர்த்துக்கல்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு போர்த்துக்கல் தகுதி பெற்றுள்ளது.

ஜேர்மனியில் வியாழக்கிழமை (05) அதிகாலை நடைபெற்ற அந்நாட்டுடனான அரையிறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே இறுதிப் போட்டிக்கு போர்த்துக்கல் முன்னேறியது.

போர்த்துக்கல் சார்பாக பிரான்ஸெஸ்கோ கொய்செய்யோ, கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, ஜேர்மனி சார்பாகப் பெறப்பட்ட கோலை புளோரியன் ரிட்ஸ் பெற்றிருந்தார்.

## புதிய நிர்வாகம் தெரிவு

■ எம்.யூ.எம்.சனூண்

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் புதிய தலைவராக புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஸ்தாபகத் தலைவர் முஹம்மது யமீன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, புதிய செயலாளராக அப்துல்லா முராதும், புதிய பொருளாளராக முஹம்மது ரஸ்லானும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கால்பந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்யும் நோக்கில் அதன் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் புத்தளம் மாநகர சபை விளையாட்டு அரங்கின் கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, புதிய நிர்வாகத்தை தெரிவு செய்யும் நோக்கில் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் ஐ.எம். நஜீமின் தற்காலிக தலைமையில் நடைபெற்ற அமர்வின் போதே புதிய நிர்வாகம் தெரிவானது.

லீக்கின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து உடனடியாக முதலாவது புதிய கால்பந்தாட்ட தொடர் ஒன்றும் ஆரம்பமாகியுள்ளது.



இத்தொடர் ஒரு நாள் தொடராக இம்மாதம் 21ஆம் திகதி கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த காலங்களில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கல்பிட்டியில் இருந்து புத்தளம் நகருக்கு வருகை தந்து போட்டி தொடர்களில் விளையாடிய கல்பிட்டி பேர்ள்ஸ் அணியை கௌரவிக்கும் நோக்கிலேயே இத்தொடர் கல்பிட்டி நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



## பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடர்: ஸ்வ்ரேவ்வை வென்று அரையிறுதியில் ஜோக்கோவிச்

### வெளியேற்றப்பட்ட அன்ட்றீவா, கீஸ்

பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு உலகின் ஆறாம்நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச் தகுதி பெற்றுள்ளார்.

புதன்கிழமை (04) அன்று நடைபெற்ற தனது காலிறுதிப் போட்டியில் மூன்றாம் நிலை வீரரான அலெக்ஸான்டர் ஸ்வ்ரேவ்வை எதிர்கொண்ட சேர்பியாவின் ஜோக்கோவிச், 4-6, 6-3, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வென்றே அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இதேவேளை, தனது காலிறுதிப் போட்டியில் பிரான்ஸின் லொய்ஸ் பொய்ஸனை எதிர்கொண்ட ஆறாம் நிலை வீராங்கனையான மிரா அன்ட்றீவா 6-8 (6-8), 3-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

இந்நிலையில், தனது காலிறுதிப் போட்டியில் எட்டாம் நிலை வீராங்கனையான மடிஸன் கீஸை எதிர்கொண்ட இரண்டாம் நிலை வீராங்கனையான கொக்கோ கௌஃப், 6-7 (6-8), 6-4, 6-1 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

## இங்கிலாந்து எதிர் மேற்கிந்தியத் தீவுகள்: இருபதுக்கு-20 தொடர் இன்று ஆரம்பம்



இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரானது செஸ்டர்-லீ-ஸ்றீட்டில் இன்றிரவு 11 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

ஒருநாள் சர்வதேசப் போட்டிக்கான தனது நிரந்தரத் தலைமைத்துவத்தை ஹரி ப்றூக் வெற்றியுடன் ஆரம்பித்த நிலையில், இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் வேறுபட்ட மேற்கிந்தியத் தீவுகளாக இருக்குமென நம்பப்படுகின்றது. நிக்கலஸ் பூரான் இத்தொடரில் இல்லா விட்டாலும் எவின் லூயிஸ், ஜோன்சன் சார்ள்ஸ், றொவ்மன் பவல், ஷெர்ஃபேன் ருதஃபோர்ட் ஆகியோரோடு சகலதுறைவீரர்களான அன்ட்ரே ரஸல், ஜேஸன் ஹோல்டர், றொமாரியோ ஷெப்பர்ட்டுடன் சுழற்பந்துவீச்சாளர் அகீல் ஹொஸைனின் பிரசன்னமானது மேற்கிந்தியத் தீவுகளின் புதிய அணித்தலைவரான ஷே ஹோப்புக்கு பலத்தை வழங்கும். மறுபக்கமாக அடுத்தாண்டு இலங்கை, இந்தியாவில் நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடருக்கு தமதிடங்களை உறுதிப்படுத்திக் கொள்ள லியாம் டோஸன், றெஹான் அஹ்மட் ஆகியோருக்கான வாய்ப்பாக இத்தொடர் நோக்கப்படுகிறது.

## இலங்கைக்கு எதிரான தொடருக்கான பங்களாதேஷ் குழாம் அறிவிப்பு

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான பங்களாதேஷ் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழாமில் வேகப்பந்து வீச்சாளர்கள் எபொடொட் ஹொஸைன், காலிட் அஹ்மட், நஹிட் ரானா, சுழற்பந்துவீச்சாளர் ஹஸன் முராட், துடுப்பாட்டவீரர் லிட்டன் தாஸ் ஆகியோர் குழாமுக்குத் திரும்பியுள்ளனர்.

பங்களாதேஷ் இறுதியாகப் பங்கேற்ற டெஸ்ட் தொடரான சிம்பாப்வேக்கெதிரான தொடருக்கான குழாமில் இடம்பெற்றிருந்த துடுப்பாட்டவீரர் மஹ்முடுல் ஹஸன் ஜோய், சுழற்பந்துவீச்சாளர் தன்வீர் இஸ்லாம், வேகப்பந்துவீச்சாளர் தன்ஸிம் ஹஸன் சகிப் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ (அணித்தலைவர்), ஷட்மன் இஸ்லாம், அனமுல் ஹக் பிஜோய், மொமினுல் ஹக், முஷ்பிக்கூர் ரஹீம், லிட்டன் தாஸ், மஹிடுல் இஸ்லாம், ஜாகிர் அலி, மெஹிடி ஹஸன் மிராஸ், தஜியுல் இஸ்லாம், நயீம் ஹஸன், ஹஸன் முராட், எபொடொட் ஹொஸைன், ஹஸன் மஹ்மூட், நஹிட் ரானா, காலிட் அஹ்மட்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 06, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.